நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI  පුදිය පූමි

சுற்று 04  ஜூலை 1997  சுழற்சி 12  விலை ரூபா 10/-  பக்கம் 12


### ஜனாதிபதியின் உத்தரவு !

கிழக்கு மாகாணத்தின் குடும்பப் பெண் கோணேஸ்வரி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்து பொலிசாரால் புதைக்கப்பட்டமை பழைய செய்தி. பல பக்க நெருக்குதல் மத்தியில் ஜனாதிபதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். அவரது உத்தரவு மை காய்வதற்கு முன் அதே கிழக்கு மாகாணத்தில் மேலும் இரு பெண்கள் பாலியல் வல்லுறவுக்கும் கொலைக்கும் உள்ளாகி இருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை அதிர்ச்சி தரும் தகவல் வெளியிட்டுள்ளது.

## மலையக மக்களை அச்சுறுத்தும்

# சிவப்பு பாஸ்போர்ட்

**இந்தியாவுக்கு அனுப்பப்படுவதற்காக சிவப்பு நிறத்திலான இந்திய பாஸ்போட்டுகள் வழங்கப்பட்ட நிலையில் இருக்கும் மலையக மக்களின் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. அவர்களுக்கும் இலங்கை பிரஜாவுரிமை வழங்க வேண்டும் என்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருவதை அரசாங்கம் கவனிப்பதாக இல்லை. இந்திய பாஸ்போர்ட் பெற்ற மலையக மக்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்குவதைப் பற்றிக் கவலைப்படாமல் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்குவதற்கான சட்டத்தை அண்மையில் அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. இச்சட்டத்தின் படி இலங்கையில் முதலீடு செய்பவர் ஒருவர் 25 ஆயிரம் டொலர்களை இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்தினால் இலங்கை பிரஜாவுரிமையைப் பெற முடியும்.**

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவுக்கு அனுப்பபட வேண்டியவர்களுக்கு இலங்கையிலுள்ள இந்திய பாஸ்போட்டுகளை வழங்கியிருந்தது. அவர்களில் பெரும்பாலானோர் 1983 இற்கு முன்பு இந்தியாவுக்கு சென்று விட்டனர். இந்திய பாஸ்போட் பெற்றவர்களில் எஞ்சி இருப்பவர்களை 1983 இற்கு பிறகு இந்தியா ஏற்க மறுத்துவருகிறது.

1983 யூலை கலவரத்தை அடுத்து இலங்கைத் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் இந்தியாவுக்கு அகதிகளாக சென்றனர். அகதிகளாக சென்றவர்களில் முழுப்பேரும் இலங்கைக்கு திருப்பிவிடவில்லை. அவர்கள் அனைவரும் இலங்கைக்கு திரும்பினால்தான் இந்திய பாஸ்போட் பெற்றவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அகதிகளாக இந்தியாவுக்கு சென்றவர்கள் அனைவரும் இலங்கைக்கு திரும்புவதற்கு ஏற்ற அமைதியான சூழ்நிலை இலங்கையில் இல்லை. அத்துடன் அகதிகளாக சென்றவர்களின் சரியான எண்ணிக்கை எவ்வளவு என்பதும் யாருக்கும் தெரியாது.

அதேபோன்று இந்திய பாஸ்போட் பெற்றும் இந்தியாவுக்கு அனுப்பப்படாதவர்களின் எண்ணிக்கையும் எவ்வளவு என்பதும் யாருக்கும் தெரியாதிருக்கிறது. பொதுவாக அவர்களின் எண்ணிக்கை 96 ஆயிரம் என்று கூறப்படுகிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பிரசாவுரிமை வழங்கும் சட்டத்தின் மீதான விவாதத்தில் பேசும் போது முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீது அவர்களின் தொகை 86 ஆயிரம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா பாஸ்போட் பெற்று இந்தியாவுக்கு அனுப்பப்படாதவர்களின் தொகை எவ்வளவு என்று இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்திற்கும் தெரியாது என்று கூறப்படுகிறது. அவர்களின் எண்ணிக்கையை தெரியாது என்று இந்தியா கூறுவதற்கும் இந்தியாவிலிருக்கும் இலங்கை அகதிகள் அனைவரும் திருப்பி அனுப்பப்படாதவரை இந்திய பாஸ்போட் பெற்ற மலையக மக்களை இந்தியா ஏற்கமுடியாது என்று கூறுவதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. அந்தக் காரணம் இந்திய பாஸ்போட் பெற்ற மலையக மக்களை இந்தியா ஏற்கத் தயாரில்லை என்பதே ஆகும்.

மறுபுறம் இந்தியா பாஸ்போட் பெற்ற மலையக மக்களில் யாருமே இந்தியாவுக்கு செல்ல விரும்பவில்லை. அதனால் அவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதே உசிதமானதாகும். அதுவே செய்யப்பட வேண்டியதுமாகும்.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தினால் தீர்வு காணப்படாது இலங்கைப் பிரஜைகளாகவோ இந்தியப் பிரஜைகளாகவோ கணக்கெடுக்கப்படாமல், இருந்த 94 ஆயிரம் பேருக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்க சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

அதாவது சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி இந்திய பாஸ்போட் பெற்று இந்தியாவுக்கு அனுப்ப முடியாததால் இங்கிருக்கும் அனைவருக்கும் இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டும்.

இந்திய பாஸ்போட் பெற்றவர்களுக்கும் இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்பட்டு விட்டால் மலையக மக்களின் பிரச்சினை சட்டரீதியாகவாவது முற்றாக தீர்ந்து விடும்.

### தொழிலாளர் சாசனத்திற்கு நேர்ந்த கதி

தொழிலாளர் சாசனத்தில் இருக்கும் கடுமையான ஏற்பாடுகள் நீக்கப்பட்டு தொழிலாளர்களும் முதலாளிகளுக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் தொழிலாளர் சாசனத்திற்கு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு சட்டமாக்கப்படும் என்று புதிய தொழிலமைச்சர் ஜோ.செனவிரட்ன தெரிவித்துள்ளார். அவர் தொழிலாளர் சாசனத்திலுள்ள கடுமையான ஏற்பாடுகள் என்று கூறுபவை தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான ஏற்பாடுகளாகும் என்பதை விளங்கிக் கொள்ள முடியும். அந்த ஏற்பாடுகள் மாற்றப்பட்டால் அது தொழிலாளர் சாசனமாக இருக்காது.

### வெளிவிவகார அமைச்சரின் பாசம் !

கொக்கோலா கம்பெனி தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை அடுத்து தொழில் திணைக்களத்தில் விசாரணைகள் நடைபெறுகின்றன. எவ்வித முன்னறிவிப்போ, நட்டஈடோ இன்றி வேலை நீக்கம் செய்யப்பட்ட, செய்யப்படவுள்ள தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பது வேலை நிறுத்த கோரிக்கைகளில் ஒன்றாகும். அது பற்றி தொழில் திணைக்கள விசாரணைகள் நடைபெறுகின்றன.

அவ்விசாரணை தீர்ப்பை அறிய சம்பந்தப்பட்ட தொழிலாளர்களும், கம்பெனியும் மட்டுமன்றி பலரும் அக்கறை காட்டிவருகின்றனர். அந்த பலரில் எமது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் ஒருவர் என்று கூறப்படுகிறது. விசாரணையை ஏன் இவ்வளவு காலம் நடத்துகிறீர்கள் என்றும், சீக்கிரமாக தீர்ப்பளிக்க வேண்டியதுதானே என்றும் அவர் தொழில்திணைக்கள அதிகாரிகளை கேட்டதாக அறியமுடிகிறது.

### அரசாங்கத் தலைவர்கள் பேசுவதைக் கேட்டால் ....

# அரசியல் தீர்வு அண்மையில் இல்லை !

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த ஆரம்ப நாட்களில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதன் அவசியம் பற்றி ஜனாதிபதி தொடக்கம் சகல அமைச்சர்களும் சாதகமான தொனியிலேயே பேசி வந்தனர். யுத்தத்திற்கான அமைச்சர் அனுரத்த ரத்வத்தை கூட அரசியல் தீர்வின் அவசியத்தைப் பற்றி பேசியவை இன்றும் ஞாபகத்தில் இருக்கிறது. குறிப்பாக ஜனாதிபதியும் அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசும் மிகுந்த நம்பிக்கை தரும் விதத்தில் அரசியல் தீர்வு காணப்படும் எனவும் எக்காரணம் கொண்டும் அந்த நிலைப்பாட்டில் இருந்து பின் வாங்க மாட்டோம் என்றும் அத்தகைய அரசியல் தீர்வை எத்தகைய எதிர்ப்புவரினும் நிலைநாட்டியே



தீருவோம் எனவும் கூறி வந்தனர். மேற்கூறியவை ஆரம்பகால நிலைமைகளில் பேசியவை. ஆனால் இன்று ஆட்சி அதிகாரம் பெற்று மூன்றாவது ஆண்டினை முடிவுறப்



போகும் இவ்வேளையில் அரசியல் தீர்வு பற்றிய நம்பிக்கைகள் கேள்விக்குறிகளாகியுள்ள சூழலே காணப்படுகின்றது. அரசியல் தீர்வுப் பொதி என்பதை அதனுள் இருப்பது எத்தகையது என்பதையும் விட அதனை ஒரு உருவ வடிவில் காட்சிப் பொருளாகக் காட்டி உள்நாட்டிலும் உலக அரங்கிலும் இன்றைய அரசாங்கம் தனக்கு தேவையானவற்றைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. உலகின் உதவி வழங்கும் நாடுகளிடம் கேட்பதிலும் பார்க்க கூடுதல் நிதி பெறவும் கடன்கள் பெறவும் அரசியல் ராஜதந்திர வழிகளில் ஒரு நற்பெயர் தோற்றத்தை கட்டியெழுப்பவும் தீர்வுப்பொதி என்பது இந்த அரசாங்கத்திற்கு கைகொடுத்து உதவி உள்ளது.

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

### தொண்டமானின் கண்டுபிடிப்பு !

இந்த அரசாங்கம் மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் என்பதானாலேயே இ.தொ.கா. அரசாங்கத்துடன் சேர்ந்திருக்கிறது. ஐ.தே.கட்சி மலையக மக்களை ஏமாற்றி விட்டது எனத் தொண்டமான் கூறியுள்ளார். ஜே.ஆர். எல்லா உரிமைகளை வழங்குவார் என்றும், பிரேமதாஸ உரிமைகளை வழங்குவார் என்றும், ஐ.தே.கட்சி மலையக மக்களின் உரிமைகளை உறுதி செய்யும் என்றும் கூறியவரும் இவரே! நாளைக்கு இந்த அரசாங்கமும் மலையகமக்களை ஏமாற்றி விட்டது என்று கூறமாட்டாரா?

நன்றி - நூலகத்திட்டம்



## வலப்பனை ஆசிரிய நியமனங்களில் குளறுபடிகள்

அண்மையில் மத்திய மாகாணசபை மத்திய அரசின் நடைமுறை கொள்கைக்கு ஏற்ப ஆசிரியர் நியமனங்களை வழங்கியது தெரிந்ததே. மலையகத்தில் ஆசிரியர் பற்றாக்குறை தீர்ப்பதற்கு எவ்வித முன் பயிற்சி இல்லாத வகையில் இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மலையகத்தில் பல பிரதேசங்களில் பல குளறுபடிகள் நடந்தது போலவே வலப்பனை பிரதேசத்தில் நடந்துள்ளன.

தனக்கு ஆதரவான அல்லது தான் சார்ந்திருக்கின்ற கட்சி அல்லது தலைவர்களுக்கு சார்பானவர்களுக்கு அண்மையிலிருக்கும் பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளன. தனக்கு மாற்று கருத்துக்கள் அல்லது தமக்கு எதிரான அரசியல் கருத்துக்களை கொண்டிருப்பவர்களுக்கு தூர இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மத்திய மாகாண கல்விச் செயலாளர் தனது சாதியையும், சொந்தத்தையும் அடிப்படையாகக் கொண்டு அண்மையிடங்களுக்கு நியமனங்கள் வழங்கி உள்ளார் என்று உடப்பு சலால பகுதியில் கல்வி கற்பித்து வரும் ஆசிரியர் மனவருத்தத்துடன் புதிய பூமிக்கு தெரிவித்துள்ளனர். அத்துடன் குறிப்பிட்ட தோட்ட பாடசாலையில் ஆசிரிய பற்றாக்குறை நிலவும் போது அத்தோட்டத்தை சேர்ந்த ஒரு ஆசிரியருக்கு நியமனம் வழங்காது அவரை பல மைல்களுக்கு அப்பால் உள்ள தோட்டப் பாடசாலைக்கு நியமனம் வழங்கப்படுகின்றது. அதேவேளை பல மைல்களுக்கு அப்பாலுள்ள ஆசிரியர்களை முன்பு குறிப்பிட்ட பாடசாலைக்கு நியமனம் வழங்கி பௌதிக சூழல், போக்குவரத்து என்பனவற்றைச் சிந்திக்காது கண்டியில் குளிரூட்டிய அறையில் இருந்து கொண்டு நியமனங்கள் வழங்கப்படுவது எந்தளவுக்கு சாத்தியமானது என்பது புரியவில்லை. இதனால் ஆசிரியர்கள் பல சிரமங்கள் பட்டு கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் திண்டாடுகின்றனர்.

## ஹபோரஸ்ட் போக்குவரத்துப் பிரச்சினை

ஹபோரஸ்ட்டுக்கான போக்குவரத்து என்பது படுமோசமான தொன்றாகும். வீதி எது என்று தெரியாத அளவுக்கு சிதைந்து சீரழிந்து காணப்படுகிறது. ஆறு ஏழு மைல்களைக் கடந்து நரகலோகப் பாதையைக் கடப்பது போன்றதாகும். குண்டும் குழியும் மட்டுமன்றிச் சில இடங்களில் பெரும் பள்ளங்களும் காணப்படுகின்றன. தற்போது ஏதோ வீதி போடப் போவது போல் பாசாங்கு காட்டும் வகையில் சில இடங்களில் கற்குவியல்கள் குவிக்கப்பட்டிருப்பினும் அதை உரியநேரத்தில் போடாததினால், அதுவே புதிய வேதனையாக மாறி நிற்கிறது. வீதி தான் அப்படி என்றால் பயணம் செய்யும் பஸ் பழைய காலத்தின் வெறும் இரும்பாகவே ஓடுகிறது. அடிக்கடி அது பிறேக் டவுனாகி விடுகிறது. ஓடினாலும் நிறைய சனங்களை ஏற்றி நசிபட்டு மிதிபட்டே பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது. இத்தனைக்கும் யாரிடம் இதைக் கூறுவது என்றும் தெரியவில்லை. தனியார் மினி பஸ்கள் தொகையாக ஆட்களை அடைத்து ஏற்றிச் செல்கிறார்கள். அவர்களுக்கு தேவைப்படுவது பணமே அன்றி, பிரயாணிகளின் பிரயாணம் அல்ல. ஹபோரஸ்டில் இருந்து தினமும் தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், வியாபாரிகள், பெண்கள் எனப் பலதரப்பட்டவர்கள் பிரயாணம் செய்கிறார்கள். தேர்தல் காலங்களில் மட்டும் வரும் பெரியோர்கள் தேர்தலில் வெற்றி பெற்றபின் இப்பாதையில் வந்து பார்த்தால் என்ன? ஒருமுறையாவது இந்த பஸ்ஸில் ஏறிப் பிரயாணம் செய்தால தெரியும் அவஸ்தை. அவர்கள் வரமாட்டார்கள். நாங்கள் மக்கள் தான் ஒன்று சேர்ந்து ஏதாவது ஆகக் கூடியதைக் கவனிக்க வேண்டும். அதற்கு உறுதுணையாக இச் செய்தியைப் புதியபூமி பிரசுரிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

பே.சிவகாமி

## பணம் வைத்திருந்தால் பயங்கரவாதி

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் தினம் தினம் தேடுதல் சுற்றிவளைப்பு இடம் பெறுவது வழமையான விடயம். இதன் போது தமிழர்கள் படும் அவஸ்தைகளும் அவலங்களும் சொல்லி மாளாதவை. பாதுகாப்புப் படையினர் தொடுக்கும் பல பத்துக் கேள்விகளுக்கு திருப்தியான பதில் கிடைக்காதுவிடின் எவரும் கூட்டிச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்படுவது நாளாந்த நிகழ்ச்சி. இதில் ஒன்று அதிக பணம் ஒருவர் வைத்திருந்தால் கூட்டிச் சென்று தடுத்து வைப்பதற்கு ஒரு காரணமாகி விடும். எப்படி பணம் வந்தது எனத் தொடங்கி இறுதியில் பயங்கரவாதிகளுக்குப் பணம் சேர்த்தவர் என்ற குற்றச்சாட்டுடன் தடுத்து வைக்கப்படுவது தற்போதைய நடைமுறையாகும். இவ்வாறு கடந்த 10.10.96 ல் சுற்றிவளைப்பின் போது வெள்ளவத்தை பொலீசார் புறக்கோட்டை வர்த்தகர் கோகில கிருஷ்ணன் என்பவரை 95 ஆயிரம் ரூபா பணம் வைத்திருந்த காரணத்திற்காக கைது செய்து 14 நாட்கள் தடுத்து வைத்திருந்தனர். பின்பு நீதிமன்றத்தில் நிறுத்தினர். ரூபா 10 ஆயிரம் ரொக்கப் பிணையில் விடப்பட்ட மேற்படி வர்த்தகரை 8 மாதங்கள் கழித்து கல்கிசை நீதிமன்றம் அவரை குற்றமற்றவர் என விடுதலை செய்துள்ளது. அவரது கைது தடுத்து வைத்தது விடுவித்ததுக்குக் காரணம் அவர் ஒரு தொகையான பணம் வைத்திருந்தமையேயாகும். அவர் ஒரு வர்த்தகர் அத்துடன் அவரது நெருங்கிய உறவினர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். எனவே அவரிடம் 95 ஆயிரம் ரூபா இருந்தமை சாதாரண ஒரு விடயமே. இன்று கொழும்பில் உள்ள தமிழர்கள் மூலமே குறிப்பாக தொடர்புகளும் போக்குவரத்தும் குறைந்துள்ள வடபகுதிக்கு பணம் சென்றடைகிறது. ஒரு உறவினர் கொழும்பு வந்து திரும்பும் போது பல ஆயிரம் ரூபாய்களை மட்டுமன்றி லட்சம் ரூபாய்களையும் வாங்கிச் சென்று அங்குள்ள உறவினர்களுக்கு கொடுப்பது இன்றைய நடைமுறை. அப்பணத்தை எதிர்பார்த்து பல பத்துக் குடும்பங்கள் அங்கு காத்து இருக்கின்றன. அதனாலேயே ஓரளவு தானும் வடபகுதியின் பட்டினி நிலை தவிர்க்கப்பட்டும் வருகின்றது. இவ்வாறான தேவையின் பொருட்டு பணம் வைத்திருக்கும் ஒருவரை பாதுகாப்புப் படையினர் கைது செய்து பயங்கரவாதிகளுக்கு பணம் சேர்ப்பவர் அல்லது பணம் கொண்டு செல்பவர் என முத்திரை குத்துவது எவ்வளவு மோசமான மனித உரிமை மீறலாகும். வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் பணத்தில் அதிக அந்நியச் செலாவணியைத் தேடிக் கொள்வதாகக் கூறும் அரசாங்கம் இங்கு அப்பணத்தை வைத்திருக்கும் தமிழர்களுக்கு பயங்கரவாதிகள் பட்டம் சூட்டி உள்ளே தள்ளிவிட முயல்வது விந்தையானது மட்டுமல்ல. ஒடுக்குமுறையின் ஒரு வடிவமும் கூட.

## நாலும் நடக்கிற உலகிலே...

### கருணாநிதியின் முதலைக் கண்ணீர்

ஈ.வெ.ராமசாமி தலைமையில் இருந்த திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து திராவிடர் முன்னேற்றக் கழகத்தை அமைக்கச் சென்றவர்களான அண்ணாதுரை, கருணாநிதி ஆகியோர் தாங்கள் கண்ணீர் சிந்திக் கொண்டே அந்த முடிவை எடுத்ததாக மீண்டும் மீண்டும் சொல்லி வந்தார்கள். பலகாலமாக இவர்களைக் 'கண்ணீர்த் துளிகள்' என்றே ஈ.வெ.ரா. ஏளனஞ் செய்து வந்தார்.

தமிழ்நாட்டிலிருந்து அண்மையில் வந்த செய்தியின்படி (வீரகேசரி 10.6.97) மாவட்டங்கட்கும் போக்குவரத்துக் கழகங்கட்கும் வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களினதும் சாதித் தலைவர்களினதும் பேர்களை நீக்குவது பற்றிய ஆலோசனை தற்போது நடந்து வருகிறது. இதைக் கருணாநிதி விரும்புகிறார். ஆயினும் அதை வெளியே சொல்லத் தயங்குகிறார். தமிழ்நாட்டு அரசியலில் சாதி அடிப்படையிலான அரசியற் கட்சிகளின் செல்வாக்கு அதிகமாகி விட்டதுடன் சாதி வேறுபாடுகளை வைத்தே அரசியல் நடத்தப்படுகிறது. எனவே தனிமனிதர்களது பேர்களை மாவட்டங்கட்கும் போக்குவரத்துக் கழகங்கட்கும் சூட்டுவதனால் ஏற்பட்டுள்ள குழப்பத்தைத்தவிர்க்கும் அதே வேளை, சாதி அரசியலின் விளைவான பகைமையைச் சம்பாதிக்காமல் நழுவும் விதமாக பெயர்கள் வேண்டாம் என்ற முடிவை நான் கண்ணீர் வடித்த படியே தான் எடுப்பேன்' என்றும் அதற்குக் கண்ணீரால் தான் கையெழுத்துப் போடுவேன்' என்றும் வழமை போல சமாளித்திருக்கிறார்.

அண்மையில் ஈழத் தமிழர்களை அழித்தொழிக்கும் யுத்தத்தை நிறுத்துமாறு கோரி நடந்த போராட்டத்தில் பங்கு கொள்ள மறுத்ததோடு அதைத் தடுத்து நிறுத்தும் முயற்சியிலும் முதலைக் கண்ணீர் வடித்தபடி தான் முதல்வர் (கண்ணீர்த்துளி) கருணாநிதி செயற்பட்டிருப்பாரென்று நாங்கள் நம்பலாம்.

### கண்ணூறு படக்கூடாது என்று...

இலங்கையின் பிரதான இடதுசாரிக் கட்சிகளில் 1960 கள் ஏற்பட்ட பிளவுகள், இரண்டு கட்சிகளிலும் பாராளுமன்ற அரசியல் சந்தர்ப்பவாதிகளது நடவடிக்கைகளினாலேயே கூர்மையடைந்தன. சமசமாஜக் கட்சியினின்று அன்று பிரிந்தவர்கள் சிறுபான்மைப் போக்காக இருந்தனர். கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்ட போது மாக்ஸிய லெனிஸிய வாதிகள் வலிமையில் அதிகமானோராக இருந்தார்கள். ஆயினும், கட்சித் தலைமையின் தவறுகளும் இலங்கை அரசியலில் ஓங்கிய குறுகிய தேசியவாதமும் அதற்கு முகங்கொடுக்கத் துணிவில்லாத பாராளுமன்ற இடசாரிகளது சந்தர்ப்பவாதமும் இடதுசாரி இயக்கத்தைப் பலவீனப்படுத்தியதோடு செங்கொடியேந்தி இனவாதம் பேசிய விஜேவீரவின் தவறான தலைமையில் ஜே.வி.பியின் எழுச்சிக்கு உதவின. ஜே.வி.பியின் தலைமையின் குறுகிய பார்வைக்கான விலை 1971 ல் சில ஆயிரம் உயிர்கள். 1989 ல் பத்தாயிரக்கணக்கான உயிர்கள். இவற்றின் பாடங்களை உரை மறுப்போர் உள்ளார்கள். ஆயினும் இடதுசாரி ஐக்கியம் பற்றிய தீர்க்கமான பார்வை கொண்டவர்கள் இருந்து வந்துள்ளனர். மறைந்த கே.ஏ.சுப்பிரமணியத்தின் தலைமையிலான புதிய ஜனநாயகக்கட்சி (அன்று இடது கம்யூனிஸ்ட் கட்சி) 1980 களின் பிற்பகுதியில் யூ.என்.பி.ஆட்சிக்கு எதிராக இடதுசாரி ஐக்கியத்தை வலியுறுத்தி நடவடிக்கை எடுத்துத் தமிழ்த் தேசியவாதிகளது பகையைச் சம்பாதித்தது. இன்றும் அதே கட்சியின் உழைப்பின் விளைவான ஐக்கிய மேதினக் கூட்டம் தமிழ் தேசியவாதிகளது மனவருத்தத்துக்குக் காரணமாகி விட்டது போலவே தெரிகிறது.

தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை பற்றிய அதிக தெளிவுடன் பேசிவரும் இடதுசாரிகட்கும் குறுகிய தேசியவாதிகட்கும் மிகவும் வேறுபாடு உண்டு. இன்று நலிந்து போயுள்ள பல தமிழ்த் தேசியவாதக் குழுக்கள் இடதுசாரிச் சக்திகளது ஆதரவை விரும்பும் அதே வேளை அவர்களது வளர்ச்சி பற்றி அஞ்சுகிறார்கள். இதன் பிரதிபலிப்பாகவோ என்னவோ 'மேதினம், இடதுகளின் கூட்டு'' என்ற தலைப்பில் சரிநிகரில் (மே 8, 1997) எழுதிய நபர் வேண்டுமென்றே இடதுசாரிகளை 'இடதுகள்' என்ற விதமாகக் குறிப்பிடுவது மட்டுமன்றி, ஜே.வி.பியின் அணி திரட்டல்கட்கு முன்பு இந்த இடதுசாரி ஐக்கியம் தாக்குப்பிடிக்குமா என்பது போன்ற கேள்விகளுடன் ஆத்ம திருப்தி அடைகிறார். இவர் 'இடதுகள்' என்றுகூறுகிற தொனியிற் கூறுவதானால், நமது 'தேசியங்களும்', 'தமிழீழங்களும்' சிங்கள, தமிழ், முஸ்லிம் மலையகத் தமிழ் மற்றும் தேசிய சிறுபான்மை இனப் பிரிவுகட்குத் தரமுடியாத நம்பிக்கையை இந்த 'இடதுகள்' தரக்கூடும் என்பதே உண்மை.

### மறுபடியும் மரணத்துள் வாழ்வோம்

பன்னிரண்டு வருடங்கட்கு முதல் வந்த 'மரணத்துள் வாழ்வோம்' என்ற தேசிய இன ஒடுக்கல் பற்றிய கவிதைத் தொகுதியின் மறுபதிப்பு அண்மையில் வெளியாகியுள்ளது. முன்னைய பதிப்பை விடச் சிறப்பான தோற்றத்துடன் நூல் வெளியாகியுள்ளது. முதற்பதிப்பில் நுஃமானின் கவிதையில் 'நாங்கள் கேட்பது பிரிவினையல்ல' என்ற கருத்துப்பட வந்த பகுதி வேண்டுமென்றே அச்சிடப்படாதமைப் பற்றி நுஃமான் சென்ற சில ஆண்டுகளாகப் பகிரங்கமாகவே குறை கூறியுள்ளார். இத்தவறு புதிய பதிப்பில் நீக்கப்பட்டுள்ளதும் பாராட்டத்தக்கது. முன்பு சிவசேகரம் எழுதிய விமர்சனத்தில் சில பாரிய அச்சுப்பிழைகள் பற்றி எழுதினார். சேரனும் சிவசேகரத்தின் கவிதை ஒன்றில் இருந்த ஒரு பிழையைச் சுட்டிக்காட்டி ஏற்கப்பட்டது. இவற்றையும் திருத்தி எழுத முயற்சி எடுத்திருக்கலாம்.

இத்தொகுதியில் தீவிரமான தமிழீழப் பிரிவினைக் கருத்தை வலியுறுத்திய கவிஞர்களில் எத்தனை பேர் இன்னமும் அதே நிலைப்பாட்டில் உள்ளார்கள் என்பது பற்றியும் நாம் சிந்திக்கலாமா?

## இராகலை சூரியகாந்தி தோட்டத்தில் வேலைநிறுத்தம்

கம்பனிகள் பத்து வீத இலாப பங்கினை தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும், வயது வந்த பிள்ளைகளுக்கு பேர் பதிய வேண்டும், தோட்டத்தில் படித்த இளைஞர்களுக்கு வேலை வழங்க வேண்டும், தோட்ட லயன்களில் உள்ள சீர்கேட்டை மாற்றி வசதிகளைச் செய்தல் வேண்டும், ஊழியர் சேமலாப நிதியை உரியகாலத்தில் கொடுபட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து இராகலை சூரியகாந்தித் தோட்டத்தின் தொழிலாளர்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தம் இரு வாரங்களுக்குப்பின் இணக்கம் காணப்பட்ட நிலையில் கைவிடப்பட்டது. கம்பனியும் தோட்ட நிர்வாகமும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்டதன் பேரிலேயே தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். பத்துவீத லாபத்தை அடுத்த வருட முற்பகுதியில் வழங்குவதாக உறுதி கூறப்பட்டது. ஏனைய கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றுவதாகப் பேச்சுவார்த்தையில் இணங்கப்பட்டது. இவ் இணக்கப்பாட்டிற்கு தொழிலாளர்கள் இணங்கிய போதிலும் ஒப்புக் கொள்ளப்பட்டவாறு நிர்வாகமும் கம்பனியும் நடைமுறைப்படுத்தத் தவறினால் மீண்டும் வேலை நிறுத்தம் செய்வதைத் தவிர வேறுவழி இல்லை என்று தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நன்றி - நூலகத்திட்டம்



புதியபூமி

S - 47, 3வது மாடி
கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி
கொழும்பு - 11
தொலைபேசி :435117, 335844

## பிரதான போக்காகி வரும்

## ஊழலும் லஞ்சமும்

ஊழலும் லஞ்சமும் சமூக விரோதிகள், ஏன் பயங்கரவாதிகள் என்றும் கூறலாம். அந்தளவிற்கு அவை நாட்டின் சகல துறைகளிலும் ஊடுருவி நாட்டையும் மக்களையும் நாசமாக்கி வருகின்றது. தனிமனிதன் தொட்டு நிறுவனங்கள் வரை இவற்றுக்கு இரையாக வேண்டிய சமூகச் சூழலே நிலவுகின்றது. சமூக வாழ்வு தான் தனிமனிதனின் சிந்தனையைத் தீர்மானிக்கிறது. நம் முன்னே விரிந்து கிடக்கும் திறந்த பொருளாதாரக் கொள்கை உருவாக்கிய வாழ்க்கை நிலைமைகள் ஒவ்வொரு மனிதனையும் சிப்பிலியாட்டுகிறது. பணம் பணம் சொத்து சொத்து சுகம் சுகம் இவையே அதி உயர் குறிக்கோளாக்கப்பட்டு அவற்றை நோக்கி ஓட்டம் ஓட வைக்கப்படுகிறது. போட்டிதான் முன்னேற்றத்தின் வளர்ச்சியின் முதுகெலும்பு எனக் கூறப்படுகிறது. இதற்காகவே திறந்த பொருளாதாரக் கொள்கை விசாலமாக விரிக்கப்பட்டு யாவரும் முன்னேறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அத்தகைய பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்து இன்று இரண்டு தசாப்தங்களாகின்றன. போட்டி முடிந்ததா? முடியவில்லை. மேன்மேலும் போட்டியாளர்கள் ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். பணம் பணம் சேர்க்கப்பட்டுவிட்டதா?

இல்லை. ஒரு சிலர் மட்டும் மேன்மேலும் பணக்காரர் ஆகினர். பெரும்பான்மையோர் மேன்மேலும் ஏழைகளாகினர். சொத்து சுகபோகம் கிடைத்ததா? இல்லை ஒரு சிலருக்கே கிடைத்தது. ஏற்றத்தாழ்வு வலுப்பெறுகிறது. வாழ்க்கை நிலைமைகள் மோசமடைகின்றன. தேவைகள் கூடுகின்றன. வருமானங்கள் அதிகரிக்கவில்லை. அதேவேளை ஆட்சியில் அரசாங்க நிறுவனங்களில் ஏனைய மையங்களின் உயர்நிலை வகிப்போர் லட்சம் கோடி எனச் சேர்த்துக் கொள்கின்றனர். நீதி, நியாயம், ஒழுங்கு, கட்டுப்பாடு, மனச்சாட்சி, மனித நேயம் யாவும் பணத்தின் முன்னே தூசுகளாகின்றன. பணமே யாவற்றையும் தீர்மானிக்கும் தீர்மானியாகி நிற்கிறது. மேல்மட்டங்களில் ஊழல் லஞ்சம் தாராளமாகிறது. அதனை உற்று அவதானிக்கும் அனைத்து மட்டங்களிலும் வெவ்வேறு அளவுகளில் பற்றிப் பரவுகிறது. இன்று ஒவ்வொரு அரசாங்கத் தொழில் பெறுவதற்கு ஒவ்வொரு விலை பேசப்படுகிறது. அந்த விலையினுள் சிற்றூழியர் தொட்டு அதி உயர்நிலை மனிதர் வரைக்கும் உரிய பங்குகள் எழுதா விதியாக விதிக்கப்படுகின்றன. இலங்கையின் எந்தப்பாகத்திலும் எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலும் 'சன்மானம்' வழங்காது ஒரு சிறு வேலையைக் கூடச் செய்விக்க முடியாத நிலைதான் காணப்படுகிறது. யாராவது லஞ்சம் கேட்டால் கன்னத்தில் அறைந்து விட்டு தன்னிடம் வருமாறு ஜனாதிபதி அண்மையில் கூறி இருந்தார். ஆனால் இதுவரை அப்படி யாரும் சென்றதாகத் தெரியவில்லை. காரணம் லஞ்சம் பெறுவது முடிந்து விட்டது என்பதல்ல. அது கேள்விக்கு அப்பாற்பட்ட ஒன்றாகி எங்கும் எதிலும் வியாபித்து நிற்கும் அந்தஸ்தை அடைந்து விட்டது என்பது தான். ஊழல் என்பதும் அவ்வாறேதான். யுத்தம் ஊழலை உற்சாகப்படுத்தியுள்ளது மட்டுமன்றி அந்த யுத்தம் நிறுத்தப்படுவதையே ஊழல் தடுத்து நிறுத்தி நிற்கும் வல்லமையையும் பெற்றுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தின் உயர் ராணுவத் தளபதிகள் யுத்தத்தின் ஊடே புரிந்த ஊழல்கள் ஏற்கனவே அம்பலமாகின. நீதிமன்றத்திலும் வழக்குகள் தாக்கலாகின. ஆனால் தற்போதைய தொடரும் ஊழலை அவை எவ்விதத்திலும் தடுத்து நிறுத்தவில்லை. ஆதலால் இன்று சமூகமயமாகி நிற்கும் ஊழலும் லஞ்சமும் இன்றைய சமூக அமைப்பின் உருவாக்கங்களில் ஒன்றேயாகும். இதனை சமய சமூக நற்போதனைகளாலோ அன்றி சட்டங்களாலோ தடுக்கவோ அன்றி திருத்தவோ இயலாது. பொருளாதார சமூக அடித்தளங்களை மாற்றியமைக்கக் கூடிய அரசியல் போராட்டங்களின் எழுச்சியும் அந்த எழுச்சியின் மூலமான சமூக மாற்றத்தாலுமே ஊழல் லஞ்சத்தை ஒழிக்க முடியும்.

ஆசிரியர் குழு

# விதியே விதியே என் செய நினைத்தாய்

# தமிழர் சாதியை...

இன்று வன்னிக் காடுகள் அதிர்கின்றன. பெருமரம் தொட்டு சிறு புதர் வரை கருகி அழிந்து கொண்டிருக்கின்றன. அந்தளவிற்கு வன்னிப்போர் உக்கிரமடைந்து நிற்கிறது. காடு கரம்பை வீடு வாசல்கள் வயல் தோட்டம் யாவுமே யுத்த அரக்கனின் தீ நாக்கினால் சுட்டெரிக்கப்படுகின்றன. உணவுக்கும் மருந்துக்கும் உரிய தரிப்பிடங்களுக்கும் ஏங்கி அலையும் அதே வேளை திக்குதிசை தெரியாது தவித்து நிற்கின்றனர் மக்கள். வன்னிப் போர் தீவிரம் அடையும் போது அதன் எதிரொலி கிழக்கிலே அவல ஒலியாக நாளாந்தம் கேட்ட வண்ணம் இருக்கிறது. இன்றைய யுத்தத்தால் கிழக்கு மாகாணம் பல வழிகளிலும் பல வகைகளிலும் பாதிக்கப்பட்டு நிற்கிறது. அண்மைய கணக்கெடுப்பு ஒன்று விதவைகள் அதிகம் உள்ள பிரதேசம் கிழக்கே என்று கூறுகிறது. 20-35 வயதுக்கு உட்பட்ட இவ் விதவைகள் நாலாயிரத்தைத் தாண்டி நிற்பதாக அவ் விபரம் தெரிவிக்கிறது. தமிழ் முஸ்லிம் உறவு சீரழிக்கப்பட்டு அதனை யுத்தம் பயன்படுத்துகிறது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் ஏற்கனவே இனக்குரோதமும் மனக்கசப்பும் வளர்க்கப்பட்ட பிரதேசமாக கிழக்கு திகழ்கிறது. அதனால் ஆயுதப் படைகளில் நோக்கிலும் போக்கிலும் இனவாத உணர்வுகள் ஊறித் திளைத்தவையாகக் காணப்படுகின்றன. அதன் நேரடிப் பாதிப்பாலும் அதற்குப் பதிலடியாகவும் மிக இளம் வயதினர் ஆயுதப் போராட்டத்தில் ஆகர்ஷிக்கப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகின்றது. மேலும் புவியியல் காரணிகளும் புலிகளில் கெரில்லா போர் முறைக்கு உகந்த சூழலைத் தருகின்றது. யாவற்றையும் நோக்கும் போது கிழக்கின் நிலைமை யுத்தத்தை மேலும் உக்கிரப்படுத்தவே செய்யும். இதனால் கடுமையாகப் பாதிக்கப்படுவது மக்களாகவே இருப்பர்.

அடுத்து விடுவிக்கப்பட்ட பிரதேசம் என்று குடாநாட்டில் இடம் பெற்று வரும் சம்பவங்கள் இதற்குத்தானா மக்களை அங்கு வருக வருக எனப் படையினர் வாழ்த்தி வரவேற்றனர் என்றே கேட்க வைக்கின்றது. இதுவரை எண்ணூறுக்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். அங்கு ராணுவ நிர்வாகம் தான் நடைமுறையில் காணப்படுகின்றது. கட்டுப்பாடுகளும் அறிவுறுத்தல்களும் இராணுவத்தாலேயே விடுக்கப்படுகின்றன. அன்றாட வாழ்வும் நடமாடும் சுதந்திரமும் இராணுவத்தாலேயே தீர்மானிக்கப்படுகிறது. குடாநாடு இராணுவத்தால் விடுவிக்கப்பட்டது என்று கூறப்படும்போது அங்கே மக்களும் அவர்களது அன்றாட வாழ்க்கையும் திறந்த வெளிச் சிறைச்சாலை போன்றே காணப்படுகிறது. இந்த நிலைமைதான் மன்னாரிலும், வவுனியாவிலும் காணப்படுகின்றது. பாஸ் முறையும் பாதுகாப்புப் படையினரின் பலவகைக் கேள்விகள் மத்தியிலும்தான் அப்பிரதேச மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். வவுனியா, மடு போன்ற பகுதிகளில் அமைக்கப்பட்ட நல்புரி நிலையங்கள், முகாம்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அடிப்படைத் தேவைகள் இன்றியே காலத்தைப் போக்கி வருகின்றனர்.

வடக்கு கிழக்குக்கு வெளியே கூடத் தமிழர்களால் நிம்மதியாக வாழ முடியவில்லை. கொழும்பில் தமிழர்கள், தமிழர்கள் என்ற காரணத்திற்காகவே தொல்லைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். சுற்றிவளைப்பு, கைது, தடுத்து வைத்தல், பணம் கறத்தல் போன்றன சர்வசாதாரணமானவையாக இடம் பெறுகின்றன. வழக்குத் தொடராமல் பல வருடக்கணக்காக தமிழர்கள் நாட்டின் பிரதான சிறைச்சாலைகளில், பொலிஸ் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவை மட்டுமன்றி புலம்பெயர்ந்து அயல் நாட்டிலும் அந்நிய தேசங்களிலும் இலங்கைத் தமிழர்கள் சிதறி அலைந்து வேதனைகளையும் சோதனைகளையும் அனுபவித்து வருகின்றனர். அல்லற்பட்டு விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டு நிற்குமோர் இனம் என்று மற்றவர்களால் ஏளனம் செய்யப்படும் இனமாக ஈழத்துத் தமிழ் இனம் இருக்கிறதா என்றதோர் கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது. இத்தனை இழப்புகள் இழிநிலைகளின் மத்தியிலும் தவறுகள் இழைத்து நிற்பினும் கூட போராட்டக் களத்தில் விடுதலைப் புலிகள் விடாப்பிடியாக இருந்து வருகின்றனர். அது ஒருவகைப் பலமாக இருந்து வரும் அதேவேளை அவர்களது தவறுகள் பலவீனத்திற்கும் வழிகோலாகக் கூடியவையாக மாறவும் வாய்ப்பு உண்டு.



அதேவேளை இன்று ஜனநாயக வழிக்கு வந்துள்ளதாகக் கூறும் முன்னாள் ஆயுத இயக்கங்கள் பாராளுமன்ற அரசியலில் சிக்குண்டு நிற்கின்றன. அவற்றுக்கு நிர்ப்பந்தம் ஒரு புறம் என்றால் சரியான கொள்கை ஒன்றினை வரையறை செய்ய முடியாத கோட்பாட்டு வறுமை மறுபுறம் உள்ளது. அதனால் பழைய தமிழ் தலைமைகள் சென்ற பாதையிலேயே சென்று கொண்டிருக்கின்றன. இவர்கள் ஐந்து கட்சிகள் என்று கூறப்பட்ட போதிலும் மனம் திறந்த ஐக்கியத்தை இதுவரை தோற்றுவிக்கவில்லை. அதேநேரம் தமிழர் விடுதலைக் கூட்டணி இந்த ஐந்து கட்சிகளையும் ஒரு பொருட்டாக எடுக்க மறுக்கின்றது. இத்தகைய ஐக்கியமற்ற தமிழர் கட்சிகளின் தலைமையானது தமிழ் மக்கள் தலைமையற்ற அரசியல் வனாந்தரத்தில் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதான ஒரு தோற்றப்பாட்டினை வழங்க ஏதுவாகியுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் அண்மைக்கால பேச்சுக்களும் நடைமுறைகளும் அமைந்து வருகின்றன.

அண்மைக்காலமாகத் தலைநகர் கொழும்பிலே சீவியஞ் செய்யும் தமிழர் தலைமைகளில் சிலர் தம்முள் முட்டி மோதிப் பத்திரிகைகள் பொதுக்கூட்டங்கள் வாயிலாகக் கடந்த கால, நிகழ்காலக் குப்பை கூழங்களை கிளறி வீதியில் வீசி நாற்றமடிக்க வைத்து வருகிறார்கள். யார் துரோகி? யார் அசல் தமிழன்? என்பதை அடித்துச் சொல்லி வைப்பதில் மும்முரமாகி நிற்கின்றனர். இவர்களது அடிதடி அறிக்கைகளில் இறந்தவர்கள் பலரும் இழுத்து விடப்பட்டுள்ளனர். அவர்களது கடந்தகால நிலைப்பாடுகள் பிய்க்கப்படுகின்றன. அன்றைய யாழ்.முற்றவெளியில் இடம்பெற்ற தமிழரசு, காங்கிரஸ் கூட்டங்களில் பேசப்பட்ட தரங்கெட்ட தேர்தல் வசை மொழிகளை நினைவூட்டுவனவாய் உள்ளன. தமிழ் இனத்தின் மத்தியில் காலதிற்குக் காலம் துரோகிகளைக் கண்டு பிடிக்கும் செயல் முறை பாரம்பரியமாக இருந்து வருகின்றது. அது இன்றும் கச்சிதமாகத் தொடரப்பட்டு வருகின்றது.

அன்று அருணாசலம் மகாதேவாவை யூ.என்.பிக்கு தமிழர்களைக் காட்டிக் கொடுத்த துரோகி என்று தேர்தல் பிரசாரம் செய்தே ஜி.ஜி. பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் வெற்றி பெற முடிந்தது. அன்று தொடங்கப்பட்ட ''துரோகிகள்'' பட்டியல் இன்று வரை நீண்டு செல்கிறது. விந்தை என்னவென்றால் மற்றவர்களைத் துரோகி என்ற பட்டம் சூட்டி தியாகி போல் நின்றவர்கள் விரைவாகப் பின்வந்தவர்களால் துரோகியாக்கி வைக்கப்படுவது தான்.

இன்று இலங்கைத் தலைநகர் கொழும்புத் தமிழ்த் தலைகளின் விவாதங்களைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அர்த்தமற்றவையாகவே காணப்படுகின்றன. நாம் அனைவரும் ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் பொறுப்புள்ள உறுப்பினர்கள் என்று எந்தத் தலைவர்களாவது சிந்தித்ததாகத் தெரியவில்லை. ஒடுக்குமுறைகளின் எந்தவொரு பாதிப்பையும் அவர்கள் பெற்றிருந்தால் இவ்வாறு பேசவும் எழுதவும் முன்வந்திருக்கமாட்டார்கள். பதிலுக்கு உருப்படியாக ஏதாவது செய்ய முடிந்திருக்கும். சொத்து சுகபோகம் பாதுகாப்பு அந்தஸ்து யாவும் குறைவின்றி உண்டு. தமக்கும் சுற்றத்தாருக்கும் செய்ய வேண்டியவற்றைச் செய்தும் கொள்கின்றனர். இடையிடையே அரசாங்கத்தைக் கண்டித்து அறிக்கை. பாராளுமன்றத்தில் ஒரு சில பேச்சுகள். இவை தமிழர் தலைமைகளை தக்கவைத்துக் கொள்ளப் போதுமானவையாகும். இந்தப் பிரத்தியேக முறைக்குப் பலமுறை முயன்றும் பலன் கிடைக்காமல் போன உள்மனக் கொதிப்பு வேறு சிலருக்கு. அதனால் மானமுள்ள, ரோசமுள்ள அசல் தமிழனாகத் தன்னைக் காட்டிக் கொள்ள தந்தையின் வழியில் தனயன் பேசியும் எழுதியும் வருகிறார்.

அது பாராளுமன்றப் பாரம்பரியத் தமிழர் தலைமையான கூட்டணிக்கு பொறுக்க முடியாததாகியுள்ளது. தாங்கள் எவ்வாறு நடந்து வந்தோம் என வரைகின்றனர். எவ்வாறு திம்புவிற்கூடாக இந்தியாவை இங்கு வரவழைத்தது போன்ற கதைகளை எல்லாம் கேட்க முடிகிறது. இவையெல்லாம் இளந்தலைமுறையினர் இத் தமிழ்த் தலைமைகளை புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு எனவும் கொள்ளலாம். இவர்களது ஒற்றுமையீனத்தை நன்கு கண்டுணர்ந்ததாலேயே அரசியல் யாப்பு விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தமிழ் இயக்கங்களைப் பார்த்து முதலில் நீங்கள் ஒன்று சேர்ந்து ஒரு இறுதியான முடிவுக்கு வாருங்கள் என்று கூறியு

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

நன்றி - நூலகத்திட்டம்



## யாழ். செயலகத்தில் எதிரொலித்த விம்மல்கள்

# மண்டபத்தை நனைத்த கண்ணீர் வெள்ளம் !

குடாநாட்டில் பல பாகங்களில் இருந்தும் வருகை தந்த ஆண்கள், பெண்கள் இளைஞர், யுவதிகள், குழந்தைகள் என முன்னூறு பேர்வரை கடந்த 29.5.97 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் யாழ் செயலகத்தை முற்றுகையிடுவது போல் ஒன்று திரண்டிருந்தனர். சோகமே உருவெடுத்த நிலையில் காணப்பட்ட அவர்கள் ஏதோ நிவாரணப் பணத்திற்காகவோ அன்றி இலவசப் பொருட்களுக்காகவோ கூடவில்லை. அவர்கள் அத்தனை பேரும் தமது பிள்ளைகளை கணவன்மாரை, சகோதரர்களை மற்றும் குடும்ப உறவினர்களை கடந்த ஒரு வருடகாலத்தில் இராணுவத்திடம் பறிகொடுத்தவர்கள். தம்மவர்கள் எங்கு இருக்கிறார்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது? ஒருமுறையாவது பார்க்க முடியாதா? என்ற ஏக்கப் பெருமூச்சுக்களுடன் தான் யாழ் செயலகத்தில் ஒன்று திரண்டு அரசாங்க அதிபர் மூலம் தமது உணர்வுகள், ஏக்கங்கள் என்பனவற்றை மட்டுமன்றித் தமது அடிப்படை மனித உரிமைகளைச் சுட்டிக் காட்டினர்.

இவ்வாறு யாழ் செயலக வளவில் கூடியவர்களை அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் அமரச் செய்து அவர்களது சோகக் கதைகளைக் கேட்டு தன்னாலான முயற்சி உதவி செய்வதாக வாக்களித்து ஆறுதல் கூறினார். அன்றைய யாழ் செயலக கூட்டத்தையும் சந்திப்பையும் கைதானோர் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. அதோடு இணைந்து அன்னையர் முன்னணி அமைப்பும் அச் சந்திப்பில் பங்கு கொண்டது.

மேற்படி பாதுகாவலர் சங்கத் தலைவர் ப.செல்வராசா தனது உரையில் கடந்த மார்ச் மாதம் 22 ம் திகதி கைதானோர் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தை உருவாக்கி அன்னையர் முன்னணியுடன் இணைந்து எம்மிடமிருந்து கைதாகி காணாமல் போனோர் பற்றி பல்வேறு முயற்சிகளை எடுத்து வந்தோம். இதுவரை பல இராணுவ அதிகாரிகளை பாராளுமன்ற உறுப்பினர்களை வேறும் பற்பலரை அணுகினோம். கடிதங்கள் மகஜர்கள் அனுப்பினோம். ஆனால் இதுவரை உருப்படியான பதில் எதுவும் கிடைக்கவில்லை. அவர்களை நாங்களும் தேடுகிறோம் என்ற பதில் மட்டுமே கிடைத்தது. எமது கண் முன்னாலேயே பிடித்துச் செல்லப்பட்ட பிள்ளைகளை அவர்கள் எங்கே தேடுகிறார்களோ எமக்குப் புரியவில்லை. உங்கள் பிள்ளை விடுதலை செய்யப்பட்டிருக்கலாம் அல்லது ஏதாவது முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம். உங்கள் பிள்ளைகள் விடுதலையாகி வீடு வந்திருந்தால் எங்களுக்கு அறிவியுங்கள் இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு நியமித்துள்ள காணாமல் போனோர் விசாரணை தொடர்பான குழு எமக்கு அனுப்பி வைத்துள்ள கடித்ததில் எழுதியுள்ளது. எமது பிள்ளைகளை விடுதலை செய்து யாரிடம் ஒப்படைத்தார்கள்? எப்போது விடுதலை செய்தார்கள். இது ஒருவகை ஏமாற்றுத்தான். இதைக் கேட்டு எவ்வாறு நாம் ஆறுதல் அடைய முடியும். ஊண் உறக்கம் இன்றி எமது பிள்ளைகளின் விபரம் அறியும்வரை தொடர்ந்து போராடுவோம். அவர்கள் எமது பிள்ளைகளை விடுதலை செய்யாது விட்டாலும் அவர்கள் [illegible]கப்பட்டுள்ள இடத்தைக் கூறி அவர்களுடன் தொடர்பு கொள்ளவாவது விட்டால் போதுமானது எனக் கண்ணீர் வடித்த நிலையில் தனது மகனைப் பிரிந்து இருக்கும் சங்கத் தலைவர் செல்வராசா கூறினார்.

கடந்த ஒக்ரோபர் 10 ம் திகதி கைது செய்யப்பட்ட ஓர் இளைஞனின் தந்தையும் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளருமான ஐ.சிவராசா பேசும்போது தமது மகனைத் தேடி இதுவரை இருநூறுக்கு மேற்பட்ட தடவைகள் இராணுவ முகாம்களுக்கு அலைந்து வந்துள்ளதைக் கூறி அவ்வாறு சென்ற சமயங்களில் தான் பட்ட துன்பங்கள் நா தழுதழுக்கக் கூறி கண்ணீர் விட்டார்.

அடுத்து அன்னையர் முன்னணியின் செயலாளரான திருமதி.இ.சிவாஜினி உள்ளத்தை நெகிழ வைக்கும் தனது சோகக் கதையை தனது உரையில் கூறினார். நான் விவாகம் செய்து ஒரு வருடம் மட்டுமே. சாவகச்சேரி சந்தையில் வியாபாரம் செய்து வந்த எனது கணவனை கடந்த வருடம் மே மாதத்தில் இராணுவத்தினர் கைது செய்தனர். என்னைப் போன்று 20, 21 வயதில் கணவன்மாரை இழந்த நிலையில் பலர் அபலைகளாக இருக்கிறார்கள். அவர்களது கணவன்மார் கைதாகும் போது மூன்று நான்கு மாதக் கர்ப்பிணிகளாக இருந்தவர்கள் இன்று பிள்ளைகளைப் பெற்றெடுத்த நிலையிலும் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறார்கள். அப்பிள்ளைகள் எப்போது தமது தந்தைமார்களைக் காணப் போகிறார்கள். இப்பச்சிளம் பாலகர்கள் செய்த குற்றம் என்ன? இந்த சமூகத்தில் இனி அவர்களின் அந்தஸ்து என்ன? இப்படி ஒரு சமூகம் எம்மினத்தில் ஏன் உருவாகியது? இந்த நிலைக்குப் பொறுப்பவர் யார்? இந்தப் பெண்களின் ஆசாபாசங்கள் இடிந்து அழிந்து போவதா? அல்லது அவர்களுக்கு நல்ல காலம் பிறக்குமா?

காணாமல் போனோர் தொடர்பாக ஆராயும் அரசின் விசாரணைக்குழு பலாலியில் இரு தடவைகள் விசாரணை நடாத்தியது. மொத்தம் 63 பேர் பற்றிய தகவல் தம்மிடம் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அதனை இதுவரை வெளியிடவோ சம்மந்தப்பட்ட உறவினர்களுக்கு தெரியப்படுத்தவோ இல்லை. ஏன் இதில் தயக்கம் காட்டப்படுகிறது. இவ்வாறு திருமதி சிவாஜினி துக்கமும் ஆத்திரமும் மிக்கவராக கேள்வி எழுப்பி கண்ணீர் சிந்தினார்.

காணாமல் போனோர் சங்கத்தின் உபசெயலாளரும் யாழ் பல்கலைக்கழக மாணவனுமான த.விஜயகுமார் உரையாற்றும் போது கூறியதாவது, சாவகச்சேரி சர்வோதயம் அமைப்பில் பணி புரிந்த தனது சகோதரன் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கைது செய்யப்பட்டார். இதுவரை எந்த விபரமும் தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் நடக்கப் போகிறது, எல்லோரும் வாருங்கள் பாதுகாப்புத் தருகிறோம் என அழைத்தது அரசாங்கம். அந்த அழைப்பை நம்பி வந்த எங்களுக்குத் தான் அரசு, அடி, உதை, சித்திரவதை, கைது, காணாமல் போதல் போன்ற பரிசுகளைத் தந்துள்ளது. இன்று குடாநாட்டில் மட்டும் அறுநூறுக்கு மேற்பட்டவர்களைக் காணாது பெற்றோர் மனைவிமார், உறவினர் கலங்கி கண்ணீர் வடித்த வண்ணம் உள்ளனர். இவர்களது வாழ்வு இருளில் தானா? இனி இவர்களுக்கு வாழ்க்கையில் விடிவு இல்லையா? என்று உணர்ச்சிக் கொந்தளிப்புடன் பேசினார் அப்பல்கலைக்கழக மாணவன். இறுதியில் ஓர் இளைப்பாறிய நீதிபதியைத் தலைவராகக் கொண்டு ஒரு சுயாதீன விசாரணைக் குழு அமைத்து விசாரணை நடாத்தி காணாமல் போனோர் பற்றிய உண்மை நிலையை அறிய உதவுங்கள் என அரச அதிபரிடம் அம்மாணவன் வேண்டுகோளும் விடுத்தார்.

பல்கலைக்கழக அனுமதி பெற்ற தமது மகன் கடந்த ஆகஸ்டில் கைதானதாகத் தெரிவித்து உரும்பிராயைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியரான வ.செல்வநாயகம் பேசினார். மண்ணெணைக் குப்பி விளக்கில் கண் துஞ்சாமல் படித்துப் பல்கலைக்கழக அனுமதி பெற்று, மூன்று மாதங்கள் பல்கலைக்கழகம் சென்ற எனது மகனைக் கைது செய்து, எனது குடும்பத[illegible]யே பாழடித்து விட்டார்களே! என்றவர் எனது மகன் கைதான பின்னர் இன்றுவரை நடைப்பிணமாகவே அலைகிறேன். பகலில் கால் போன போக்கில் திரிகிறேன். இரவில் நித்திரை இல்லை. ஏதோ அரைகுறைச் சாப்பாடு. இந்நிலை தொடருமா? என் மகன் என்னிடத்தில் வரமாட்டானா? என்ற ஒரே சிந்தனையுடன் அலைகிறேன் என்று கண்ணீர் விட்டார்.

இன்னும் தனது மகனுக்காக வே.நவமணி லீலா, தனது கணவனைத் தேடி அலைந்து வரும் இளம் பெண் சி.பத்மினி, கணவனைக் காணாது கலங்கி நிற்கும் குடும்பப் பெண் ஜெ.தமிழ்தேவி உட்பட பலர் தமது அவல நிலைகளைக் கண்ணீர் பெருக்குடன் எடுத்துரைத்தனர். கூடியிருந்த அனைவரும் வேதனையும் விம்மலும், அழுகையுமாகக் காணப்பட்டனர். கூட்டத்தில் குழந்தைகள் சிறுவர்களின் அழுகைக் குரல்கள் நெஞ்சைப் பிளப்பது போல் இருந்தன. அரச அதிபரும் அதிகாரிகளும் சோகமயமாகி ஆறுதல் கூறி உங்களில் ஒருவனாக இருந்து என்னாலான முயற்சி செய்வதாகக் கூறினார். இக்கூட்டத்திற்கு எந்தவொரு இராணுவ அதிகாரியும் சமூகம் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



கடந்த 29.05.97ல் யாழ் செலகத்தில் ஒன்று திரண்ட காணாமல் போனோரின் பெற்றோர் மனைவிமார் சகோதரர்கள் கதறி அழும் காட்சி

யாழில் இருந்து சூரிய தேவன்

## இப்படியும் நடக்கிறது

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தேவையான தகைமை அவருக்கு 10 வயதுக்கு கூடுலாகவோ அல்லது குறைவாகவோ இருக்கக்கூடாது. மாறாக, அவருக்கு படிக்கத் தெரியுமா? படிக்கத் தெரியாதா என்பதல்ல தகைமை.

மலையகத்தில் சிலபாடசாலைகளில் குறிப்பாக நகர்ப்புறங்களில் உள்ள பெரிய பாடசாலைகளில் சில விசித்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்பதாகவே, ''நீங்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் அதற்கு நாங்கள் (ஆசிரியர்கள்) பொறுப்பில்லை என்று உங்கள் பெற்றோரிடம் இப்போதே கடிதம் கொண்டு வாருங்கள்.'' என்று கூறப்படுவதோடு,
- ஒரு பிள்ளைக்கு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்துவதற்கு மாதாந்தம் ஒரு பிள்ளையிடமிருந்து 300/= அறவிடப்படுகிறது.
- அத்தோடு நன்றாக படிக்கும் பிள்ளைகளை மாத்திரம் தெரிவு செய்து அவர்களுக்கு படிப்பிக்கின்றார்கள். மற்றவர்களுக்கு உரிய வயது இருந்தும் அம்மாணவர்கள் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதில்லை. இது வழமையாகவே ஒரு பாடசாலையில் தொடர்ந்து நடந்து வருகின்றது. இது சம்மந்தமாக அம்மாணவர்களின் பெற்றோர்கள் வேதனையடைகின்றார்கள். அத்தோடு பாடசாலையில் கேட்கும் சகல நூல்களையும் ஏனைய வசதிகளையும் சகல கஸ்டங்களுக்கு மத்தியிலும் கொடுக்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்பெல்லாம் நம் தலைவர்களுக்கு வாக்களிப்பதுபோல் தான் உள்ளது.

ஆனால் சில சிறிய பாடசாலைகளில் ஆசிரியர்கள் எவ்வித கட்டணமுமின்றி பாடசாலை விட்டு நடந்து சென்று படிப்பித்து நல்ல பெறுபேற்றை பெற வைக்கின்றார்கள். அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# தொழிற்சங்கவாதி அமைச்சர்களால் தோ.தொழிலாளர்களுக்கு கிடைக்கும் நன்மை?

திருவாளர்கள் எஸ்.தொண்டமான், பி.சந்திரசேகரம், கஜதீர ஆகியோர் தொழிற்சங்கவாதிகள். தொண்டமான் இ.தொ.கா தலைவர், சந்திரசேகரம் ம.ம.மு.யின் தலைவர். கஜதீர செங்கொடிச் சங்கத்தின் தலைவர்.

எஸ்.தொண்டமான் கால்நடை அபிவிருத்தி தோட்டப்புற உள்ளகக் கட்டமைப்பு அமைச்சராகவும், சந்திரசேகரன் தோட்டப்புற வீடமைப்பு பிரதி அமைச்சராகவும், கஜதீர தோட்டத் தொழிற்துறை பிரதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்படி மூன்று பேரும் தோட்டத் தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாவர். தோட்டத்துறையினரதும், தொழிலாளர்களினதும் அபிவிருத்தியுடன் தொடர்புடைய அமைச்சுகளிலே அவர்களின் பொறுப்பில் இருக்கின்றன.

அத்துடன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான இந்திக குணவர்த்தன வீடமைப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் அரசியலும் தோட்டத்தொழிலாளர்சபையை மையப்படுத்தியே அமைந்திருக்கிறது. குறிப்பாக அவிசாவளை பகுதிறப்பர் தோட்டத் தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பை வைத்திருப்பவர்.

அமைச்சரவை மாற்றங்கள் பொதுவாக அரசாங்கத்தின். சமூகமான செயற்பாட்டிற்காகவே நடை பெறுவதுண்டு. இருப்பினும் மாற்றங்கள் இடம்பெற்றவுடன் புதிய அமைச்சர்கள் பற்றி சிறிதுகாலம் மக்கள் கதைப்பதுண்டு. அதாவது பழைய அமைச்சரைவிட புதியவர்கள் திறமையானவர்கள் என்றும், அவருக்கு ஏற்ற பொறுப்பே வழங்கப்பட்டுள்ளது என்றும் பொதுவாக கதைக்கப்படுவதுண்டு.

அதேபோன்று தோட்டத் தொழிலாளர்களும் சிந்திக்கிறார்கள். தங்களுடன் தொடர்புடையவர்கள் தங்களை அபிவிருத்தி செய்யக்கூடிய பதவிகளை பொறுப்பெடுத்திருக்கும் போது 'ஆசை' ஏற்படுவது இயல்பு தானே. அவ்வகையில் தொண்டமான், சந்திரசேகரம், கஜதீர, இந்திக குணவர்த்தன என்போர் பற்றியும் தோட்டத் தொழிலாளர்களின் எதிர்பார்ப்புகளை அவதானிக்க முடிகிறது.

தொண்டமான் அவரது கால்நடை அபிவிருத்தி அமைச்சை கொண்டு தோட்டப்புறங்களில் கால்நடை அபிவிருத்தியை ஏற்படுத்துவார் என்றும் அவரின் தோட்டப் புற உள்ளக கட்டமைப்பு அமைச்சை கொண்டு தோட்டங்களில் வீதிவசதி, நீர் மின்சாரவசதி போன்ற பொதுவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பார் என்றும் மக்கள் நம்புகிறார்கள்.

பிரதியமைச்சர் கஜதீர தோட்டத்தொழில் அமைச்சினை பொறுப்பேற்றிருப்பதால் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்து தோட்டத் தொழிற்துறையை பாதுகாக்க முயற்சிகளை எடுப்பார் என்றும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.



வீடமைப்பு அமைச்சர் இந்திக குணவர்த்தன அவரது பிரதியமைச்சகளினூடாக தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கைகளை எடுப்பார் என்றும் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்பார்க்கின்றனர். பிரதியமைச்சர் சந்திரசேகரனும் அமைச்சர் இந்திக குணவர்த்தனவின் உதவியுடன் தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுப்பிரச்சினையை தீர்க்க திட்டங்களை முன்னெடுப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் ஒருமுகப்பட்டு செயற்படுவதிலேயே தோட்டத் தொழிலாளர்களின் எதிர்பார்ப்பின் வெற்றி தங்கியுள்ளது. இவர்கள் தங்களது தொழிற்சங்க லாபங்களை மட்டும் கருத்திற்கொண்டு ஒருவருக்கொருவர் எதிராக செயற்பட்டால் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்காது. அதுமட்டுமல்ல தோட்டத் தொழிலாளர்களுக்கு பாதிப்பே ஏற்படும்.

அவ்வாறான நிலைமையின் ஐ.தே.கட்சி அதனது செல்வாக்கை மலையக மக்கள் மத்தியில் நிலைநாட்டுவது மிகவும் இலகுவாகிவிடும். அதற்குப் பிறகு மலையகமக்கள் ''சாராயத்திற்காக'' ஐ.தே.கட்சியை ஆதரித்துவிட்டார்கள் என்று மிகவும் கொச்சையாக பேசிப் பிரயோசனம் இல்லை. ஐ.தே.க மலையகமக்களை ஏமாற்றிவிட்டது என்று குறைகூறியும் பயனேதுமில்லை.

மேற்படி அமைச்சர்களினதும் பிரதியமைச்சர்களினதும் பதவிக்காலம் இன்னும் இரண்டு வருடங்களுக்கே நீடிக்கும் என்றாலும் அதற்குள் பல அபிவிருத்திகளை செய்ய முடியம். பல அபிவிருத்திகளுக்கு அடித்தளம் இடவும் முடியும்.

இதைவிட தொழிற்சங்கவாதிகளான அலவி மௌலானா வை.பி.டி.சில்வா ஆகியோர் பிரதியமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சில ஆசிரியர்களின் புலம்பல்

மலையகத்தில் ஏதோ ஒரு வகையில் இன்று ஆசிரியர் தொகை அதிகரித்து வருவது சந்தோசமான விடயம். இதை 1995 - 1997ம் ஆண்டுவரை உள்ள தொகையை வைத்து கூறலாம். அதாவது 1995 ம் ஆண்டு ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியிலிருந்து வெளியேறிய ஆசிரியர்கள், போட்டிப் பரீட்சையின் மூலம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று க.பொ.த உயர்தரம் சித்தி பெற்றவர்கள் 1996 ஜனவரி மாதம் ஆசிரியர்களாக (பயிலுனர்களாக) பாடசாலைக்கு சென்றார்கள்.

1997ம் ஆண்டு ஜனவரியில் ஆங்கில ஆசிரியர்களும், அதே தினத்தில் ஏனைய பயிற்சி ஆசிரியர்களும் நியமனம் பெற்றார்கள். இவர்களின் பின் 1997 ஜூன் மாதத்தில் இன்னும் பயிற்சி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்குச் சென்றனர். இவ்வருடம் இன்னும் ஆசிரியர்கள் தருவதாக பேச்சுகள் அடிபடுகின்றது. இருந்தும், பாடசாலைகளில் பூரணமாக ஆசிரியர்களின் வெற்றிடங்கள் நிரப்பட்டுவிடவில்லை.

1996 வந்த பயிலுனர்களுக்கு 2000/= கொடுக்கப்படுகிறது. 1997ல் வந்தவர்களுக்கு 2500/= ரூபா வழங்கப்படுகிறது. 1996ல் நியமனம் பெற்றவர்கள் அதிகூடிய புள்ளிகளைப் போட்டிப் பரீட்சையில் பெற்றும் இப்படிக் குறைவான சம்பளம் கொடுக்கப்படுகிறதே என்று கவலைப்படுகிறார்கள். ஆகவே 1996ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட பயிலுனர்களுக்கும் அவர்களது கொடுப்பனவை அதிகரிக்க வழிசமைக்குமாறு ஆசிரியர்கள் வேண்டுகிறார்கள்.

இதனால் தமது இருப்பிடத்திலிருந்து எத்தனையோ மைல் அப்பாலுள்ள பாடசாலைக்கு நடந்து சென்று கற்பிப்பதோடு, பாடசாலைக்கு நேரத்துக்கு பின்னரும் சில ஆசிரியர்கள் சிரத்தை எடுத்து கற்பிப்பதோடு பாடசாலையில் புற வேலைகளிலும் சமூக உணர்வுடனும், பொறுப்புடனும் சேவை செய்யும் ஆசிரியர்கள் விரக்தியான ஒரு நிலையிலேயே உள்ளார்கள்.

ஆகவே இவர்களது விடயத்தில் இது சம்மந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துவது சிறப்பானதாகும்.

# ஒரு மலையக மாணவனின் டயறி

எஸ்.உதயசூரியன்

26.05.97 - 30.05.97

தோட்டத்தில் வேலைநிறுத்தம் இடம் பெற்றது. 25 நாட்கள் வேலை கொடு. வயது வந்த இளைஞர் யுவதிகளுக்கு பெயர் பதிவு செய். போன்ற ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இவ்வேலை நிறுத்தம் இடம் பெற்றது. பல இடங்களில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தது. ஏதும் பிரச்சினை நடைபெறும் அதனால் ஸ்கூல் போக வேண்டாம் என அம்மா கூறினார். திங்கள், செவ்வாய் பாடசாலை போகவில்லை. திங்கள் சமய பாடமும், செவ்வாய் தமிழ் எழுத்தும் நடைபெற்றதாக, முரளி கூறினான். தோட்டத்தில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டரில் உள்ள விடயங்களை ஒரு ஏட்டில் எழுதிப்பார்த்தேன். அம்மாவிடம் காட்டினேன். ''நீயும் ஸ்ரைக்கில சேர்ந்துட்டியா'' என்று கூறினார். புதன், வியாழன் மட்டும் பாடசாலை போனேன். இரண்டு நாளும் ஒரு பாடமும் நடக்காமையால் வெள்ளி வீட்டிலிருந்தேன். தொடர்ந்து வேலை நிறுத்தம் இடம் பெற்றது. வெள்ளி காலை அம்மாவுடன் விறகு பொறுக்கப் போனேன்.

2.6.97 - 6.06.97

தோட்டத்தில் தொடர்ந்து வேலை நிறுத்தம் நடைபெற்றது. திங்கள் பாடசாலைக்குப் போனேன். தமிழ் வாசிப்பு மட்டும் நடைபெற்றது. செவ்வாய் பாடம் ஒன்றும் நடக்கவில்லை. வியாழக் கிழமை உலக சுற்றாடல் தினம் என்பதால் செவ்வாயன்றும் புதனன்றும் நேரத்தோடு பாடசாலை விடப்பட்டது. வகுப்புகளை எல்லாம் கூட்டி சுத்தம் செய்ய வேண்டும் என பெரிய சேர் சொன்னார். லீலாவும், மீனாவும் வகுப்பை கூட்டினார்கள். நாங்கள் கிறிக்கட் விளையாடினோம். வியாழன் உலக சுற்றாடல் தினம் நிகழ்ச்சி இடம் பெற்றது. பெரிய சேர், மற்றும் ரவி சேர் பெரிய வகுப்பு அண்ணன் இரவிக்குமார் ஆகியோர் பேசினார்கள். எனக்கு ஒன்றும் தெளிவாக விளங்கவில்லை. எங்கள் வகுப்பு பிள்ளைகள் எல்லாம் பின்னாலிருந்து சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். பெரிய வகுப்பு அண்ணன்மார் வந்து பாத்திமா, ராஜமலர், கோவிகிருஷ்னா ஆகியோரது தலையில் கொட்டினார்கள். மரங்களை வெட்டக்கூடாது என எல்லோரும் எழுந்து நின்று ஐந்து முறை கூறுங்கள் என்று பெரிய சேர் கூறினார். எல்லோரும் சத்தமாக கூறினார்கள். நேரத்தோடு பாடசாலை விடப்பட்டது.

வீட்டுக்குப் போனதும் மரம் வெட்டக்கூடாது என்று சொன்னார்களே. நமது பெரிய தொரை ஆளுகள வச்சி எல்லா மரத்தையும் வெட்டி கொழும்புக்கு ஏத்துரானே அது என்னா ஞாயமுனு அம்மாவிடம் கேட்டேன். உங்களத்தான் மரம் வெட்ட வேணாமுனு சொன்னாங்களே தவிர அவுங்கள மரம் வெட்ட வேணாமுனு சொல்லலையே என்று அம்மா கூறினார். எனக்கு குழப்பமாக இருந்தது. வெள்ளி பாடசாலை போகவில்லை.

9.06.97 - 13.06.97

வீட்டில் சாப்பாடு ஒன்றுமில்லை. இன்று சம்பளம் போட்டால் பகல் சாப்பாட்டுக்கு பாண் வாங்கி தாரேன் என்று அம்மா கூறினார். இதனால் திங்கள் பாடசாலைக்குப் போகவில்லை. தோட்டத்தில் வேலை நிறுத்தம் நடைபெறுவதால் சம்பளம் கொடுக்க முடியாது என்று பெரியதுரை கூறியதாக காளிமுத்து தலைவர் கூறினார். அப்படி என்றால் நாளை உண்ணாவிரதப் போராட்டம் செய்வோம் என்று எல்லோரும் கூடி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். கொழுந்து மடுவத்தில் எல்லா மக்களும் கூடியிருந்ததை இன்றுதான் முதன் முதல் பார்த்தேன். அம்மா யாரிடமோ கடன் வாங்கி பாண் வாங்கி தந்தார். கீரை சுண்டலுடன் சாப்பிட்டேன். செவ்வாய் கிழமை தோட்டத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. எல்லோரும் காமன் கூத்துப் 'பொட்டலில்' கூடியிருந்தார்கள். கணக்குப்பிள்ளையிடம் போராட்ட விடயத்தைக் கூறுவதற்கு சுப்பிரமணி மாமா போனார். எல்லோரும் அமர்ந்திருந்தார்கள். என்ன பிரச்சினை வந்தாலும் இன்று முழுவதும் அமர்ந்திருந்து போராட்டத்தை நடத்த வேண்டும் என்று தலைவர்மார்கள் கூறினார்கள். பாடசாலைக்குப் போகவில்லை. அம்மாவுடன் நானும் உட்கார்ந்திருந்தேன்.

மாலை மூன்று மணிக்கு பத்து பொலிஸ்காரர்கள் வந்தார்கள். உடனடியாக கலைந்து போகும்படி கூறினார்கள். தமிழ் பொலிஸ்காரர் ஒருவரும் இருந்தார். கம்பனி பெரிய அநியாயம் பன்னுதுங்க, அதனால்தான் இந்த போராட்டம். வேலைக்கி திரும்படிட்டி சம்பளமும் இல்லங்களாம் என்று எடுத்து கூறினார்கள். 'அதிங் எல்லாம் தெரியாது எல்லோரும் வீட்டுக்குப் போறது' என்று பொலிஸ்காரர் கூறினார்கள். அது முடியாது என உட்கார்ந்திருக்க பொலிஸ் ஜீப்பிலிருந்து பெரிய டோக்குகளை எடுத்து சுட்டார்கள். எங்கும் ஒரே புகையாக இருந்தது. எனக்கு கண்கள் எரிந்தன. அம்மா என்று கத்திக் கொண்டு ஓடினேன். ஆட்களெல்லாம் கத்திக் கொண்டு ஓடுவது கேட்டது. ஆலமரம் சந்தி வந்ததும் அப்படியே உட்கார்ந்து விட்டேன். அம்மா அழுதபடி வந்து என்னைக் கூட்டிக் கொண்டு போனார். பத்துப் பேருக்கு காயம். பொலிஸ்காரன்கள் கம்பினால் அடித்தும் இருக்கின்றார்கள் என பேசிக் கொண்டார்கள். அம்மாவுக்கு காலில் லேசான காயம். பொலிஸ்காரன் சுட்டபோது வீழ்ந்து வெடித்தது. கண்ணீர் புகைக்குண்டு என அன்னாசாமி மாமா கூறினார். அந்திக்கு கீழேயுள்ள 'ஒத்த கடையில்' கடனுக்கு அம்மா சாமான் வாங்கி வந்தார். புதன் பாடசாலைக்குப் போனேன். சமய பாடம் நடைபெற்றது. வியாழன், வெள்ளி, தமிழ் வாசிப்பு, எழுத்து இடம் பெற்றது. வியாழன் காலை சத்திய சாயி பாபா பிரார்த்தனை இடம் பெற்றது. வெள்ளி பகல் சுரேஸ் சேர் ''உங்க தோட்டத்துல என்னாடா கொலப்பம்'' என்று கேட்டார். ''கொலப்பம் இல்லங்க சேர், ஆளுங்க உண்ணாவிரத போராட்டம் நடத்தினப்போ பொலிஸ்காரர் வந்து அடிச்சிப்புட்டாங்க'' என்றேன். தோட்டத்து ஆளுகளுக்கு இது எல்லாம் தேவதானாடா? என்று முனங்கியபடி போய்விட்டார். டவுனுல சிறிய பெட்டிக்கட வச்சிக்கிட்டு இருக்கும் இவுங்க குடும்பம் தங்கள மொதலாளி குடும்பமுனு நெனச்சிக்கிட்டு இருக்கு. இந்த ஆளுக்கு முன்ன மூள சரியில்லாத அங்கொடைக்கு கொண்டு போயிருந்தாங்க என்று சொல்லி பெரிய வகுப்பு அண்ணன்மார்கள் சிரித்துக் கொண்டு வந்தார்கள். சுரேஸ் சேரின் நிலையை இன்றுதான் புரிந்து கொண்டேன். புதன், வியாழன், வெள்ளி தோட்டத்தில் வேலை நிறுத்தம் தொடர்ந்தது.

16.06.97 - 19.06.97

சில கோரிக்கைகளுக்கு நிருவாகம் ஒத்து வந்ததால் ஆட்கள் வேலைக்குப் போனார்கள். திங்கள் பாடசாலைக்குப் போனேன். பெரிய வகுப்பு அண்ணன்மார்களுக்கும், சேர்மார்களுக்கும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. அண்ணன்மார்கள் பெட்டிங் செய்து முடிந்ததும் மழை வந்து விட்டது. இதனால் செவ்வாய் விளையாட்டு தொடர்ந்தது. சேர்மார்கள் தோல்வியடைந்தனர். ஒரு சேரை இன்னொரு சேர் கெட்டமாதிரி எல்லாம் பேசிக் கொண்டு போனார்கள். வியாழன் கணித பாடம் இடம் பெற்றது. பெரிய வகுப்பு அண்ணன் கூட்டல் கணக்கு போட்டு திருத்தினார். ரவி, சுந்தரர், மாலா நன்றாக அடிவாங்கினார்கள். வியாழன் அம்மாவுக்கு தேத்தண்ணி கொண்டுபோக வீட்டிலிருந்தேன். இரவு அம்மா கூடையுடன் போவதை வரைந்து பார்த்தேன்.

நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கு நோக்கியா? தெற்கு நோக்கியா?

அ. பூபதி

கடந்த மே மாதம் 13 ம் திகதி புனித வெசாக் தினம் கொண்டாடப்படுவதற்கு ஒரு வாரம் முன்னதாகவே பெரும் எடுப்பிலான வடக்கு நோக்கிய வன்னிப் படையெடுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு இடப்பட்ட பெயர் 'வெற்றி நிச்சயம்' (ஜெய சிகுறு) என்பதாகும். பொது சன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அரசியல் தீர்வுக்குப் பதிலாக இராணுவத் தீர்வை வேகப்படுத்தும் வகையில் முன்னெடுத்து வந்த பல பெயர்களிலான இராணுவ நடவடிக்கைகளில் இவ் 'வெற்றி நிச்சயம்' போர் முனை மிக முக்கியமானதாகும். 'முன்னேறிப்பாய்தல்', 'சூரிய கதிர்', 'சத்ஜெய', 'எடிபல' போன்ற இராணுவ நடவடிக்கைகள் புலிகள் இயக்கத்தை துரத்தி ஒதுக்கி காட்டிற்குள் ஓரப்படுத்துவதாகவே அவை அமைந்திருந்தன. புலிகளைக் காயப்படுத்தி பலவீனமாக்கும் அதே வேளை குடாநாட்டை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் வாயிலாக தென்னிலங்கை மக்களிடம் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுவதுடன் சர்வதேச சமூகத்திடம் தமது நிலையை ஸ்திரமாக்கிக் காட்டுவதாகும். அவ் இராணுவ நடவடிக்கைகள் அமைக்கப்பட்டன. மேலும் கிளிநொச்சியின் மையப்பகுதியை கைப்பற்றியதன் பின் வவுனியா - மன்னார் வீதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததினால் காட்டுப் போர் முனையில் தம்மால் முன்னேற் முடியும் என்ற ஒரு நம்பிக்கைத் தோற்றப்பாட்டை இலங்கை இராணுவம் பெற்றுக் கொண்டது. மேற்கூறிய அத்தனை போர் முனைகளிலும் புலிகள் தமது முழுப் பலத்தையும் பிரயோகிக்கவில்லை என்பது ராணுவ அவதானிப்பாளர்கள் அறியாத விடயமல்ல. இருப்பினும் புலிகளிடம் ஆட்பலம் குறைந்து வருவதாகவும் மருத்துவ உணவு வசதிகள் மிகத் தாழ்ந்த நிலையில் காணப்படுவதாகவும் ராணுவ பக்கத்தில் கணக்கிடப்பட்ட அத்துடன் வன்னிக்கு இடம் பெயர்ந்த மக்களிடமும் வலிகாமத்திற்குத் திரும்பியோரிடமும் புலிகளுக்கு எதிரான கண்டன அபிப்பிராயங்கள் இருந்து வந்ததையும் அரசாங்க பக்கத்தில் பெருக்கி மதிப்பிடப்பட்டது. முல்லைத்தீவு முகாம் தகர்ப்பில் புலிகளின் கைகளுக்குச் சென்ற நீண்டதூரப் பீரங்கிகளும் அவற்றுக்கான ஷெல்களும் பெருமளவு உள்ளதுடன் அதே வகையான கனரக ஆயுதங்கள் அவர்களது கைகளில் இருப்பதை அறிந்த நிலையிலேயே வன்னிப் போருக்கு் திட்டங்கள் வகுக்கப்பட்டு ஆயத்தங்கள் செய்யப்பட்டன. இத்திட்ட வகுப்பிலும் ஆயத்தப் பயிற்சிகளிலும் அந்நிய ராணுவ உயர் அதிகாரிகள் சம்மந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது வெறும் ஊகங்கள் என்று கூறிவிடமுடியாது. விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்துவது போல் பாகிஸ்தானிய இராணுவ அதிகாரிகள் சம்மந்தப்பட்டார்களா? அல்லது முன்பு கிடைத்த செய்திகள் கூறுவது போல் அமெரிக்க ராணுவ அதிகாரிகள் இருந்து வருகிறார்களா? என்பது இரகசியமாகவே இருந்து வருகின்றன. ஆனால் எத்தனை நாட்களுக்கு இவற்றை மூடிக் கட்டிக் கொள்ள முடியும்? எவ்வாறாயினும் வன்னிப் போருக்கு வெளியே கூறப்பட்ட காரணம் யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப்பாதையைத் திறப்பதும் அதன் மூலம் அழிந்து போய் கிடக்கும் குடாநாட்டைப் புனரமைப்புச் செய்வதுமாகும் என்றவாறே பிரசாரங்கள் செய்யப்பட்டன. வவுனியா - கிளிநொச்சி பிரதான வீதியில் எஞ்சியுள்ள நாற்பத்தி ஐந்து மைல் நீளத்தை ராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விட்டால் தரைவழிப் பாதை திறக்கப்பட்டு விடும் என்றே கூறப்பட்டது. ஆனால் ராணுவ வியூக வகுப்பாளர்கள் தரைவழிப்பாதை திறத்தல் என்னும் பெயரில் மிகக் கடூரமானது கொடூரமிக்கதுமான இராணுவ நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கவே திட்டம் தீட்டினார். அதாவது இதுவரை ஆங்காங்கே புலிகளைக் காயப்படுத்தவும் துரத்தவும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவுமே ராணுவத்தால் முடிந்தது. ஆனால் வன்னிப் போர் என்பதன் மூலம் புலிகளின் வாய்களுக்கு ஊடாக அம்புகளைச் செலுத்தி புலிகளின் இருதயம், குடல் பகுதி யாவற்றையும் சின்னா பின்னப்படுத்தி அழித்து ஒழித்து விடும் நோக்குடையதாக இருந்தது. இந்த இராணுவத் திட்டத்தின் அடிப்படையிலேயே 'வெற்றி நிச்சயம்' இராணுவ நடவடிக்கை வன்னிப்போராகத் தொடங்கப்பட்டது. இவ் ராணுவ உத்தியையும் வியூகத்தையும் நன்கு அறிந்திருந்த விடுதலைப் புலிகள் என்றுமில்லாதவாறு எதிர்த் தாக்குதல்களுக்குத் தம்மைத் தயார் படுத்துவதில் மும்முரமாகினர்.

## வெற்றி நிச்சயம்:



அவர்களது எதிர்த்தாக்குதலின் அளவை மதிப்பிடுவதற்கு வெற்றி நிச்சயம் தொடங்கப்பட்டு ஒன்றரை மாதங்கள் சென்ற பின்பு இருமுனைகளில் இருந்தும் முன்னேறிய தூரம் ஆறு அல்லது ஏழு மைல்களாக மட்டுமே காணப்படுகின்றன என்பது போதுமானதாகும். வவுனியா கிளிநொச்சி பிரதான வீதியில் புளியங்குளத்தை இராணுவம் சென்றடைய இரு மாதங்களுக்கு மேல் தேவைப்பட்டுள்ளது. வவுனியா நகரத்தில் இருந்து புளியங்குளத்தின் தூரம் பதினைந்து மைல்களாகும். ஆனால் ஏற்கனவே இராணுவம் நொச்சிமோட்டையில் இருந்த வேளை ஆறு மைல்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. மிகுதி ஒன்பது மைல்களில் மூன்று மைல்கள் வரை எவரும் இல்லாத சூனியப் பகுதியாகவே இருந்து வந்தது. ஆதலால் ஓமந்தை வரை இராணுவத்தால் ஓரளவு குறைந்த இழப்புகளுடன் முன்னேற முடிந்தது. அதேபோன்று மணலாறில் (வெலி ஓயா) இருந்து முன்னேறிய மற்றொரு அணி நெடுங்கேணி வரை செல்ல முடிந்தது. அங்கும் பெரும் இழப்பை தவிர்க்க முடிந்தமைக்குக் காரணம் கடந்த காலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் உருவாக்கப்பட்ட பகுதிகள் இராணுவ முன்னேற்றப் பாதையில் அமைந்திருந்தமையாகும். இவ்வாறு தமக்குச் சாதகமான சூழலைப் பயன்படுத்தி ஒரு சிறிய தூரத்தைக் கைப்பற்றி அங்கே தத்தமது நிலைகளைப் பலப்படுத்தி அடுத்த நகர்வுக்கு தயாராகிக் கொண்டிருந்த ராணுவம் புலிகளிடமிருந்து பாரிய அதிரடித் தாக்குதல் வரும் என எதிர்பார்த்திருக்கவில்லை.

அவ்வாறு எதிர்பார்க்காமைக்குக் காரணம் புலிகள் பின்வாங்கி கிழக்கில் தமது தாக்குதல்களை அதிகரித்து வருவது போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கியிருந்தனர். அவ்வாறே புலிகளை கிழக்கில் எதிர்கொள்வது போல் காட்டிக் கொண்டு வன்னியில் மேலும் தமது இலக்கில் முன்னேறவே இராணுவம் மிகக் கடுமையான திட்டங்களுடன் தம்மைப் பலப்படுத்தி வந்தனர். பிரதான வீதியின் இருமருங்கிலும் காடுகள் பலத்த அழிவுகளுக்கு உள்ளாக்கப்பட்டன. பலநூறு வருடப் பழமை வாய்ந்த பெருமரங்கள் வீழ்த்தப்பட்டன. வயல்கள் வீடுகள் தோட்டங்கள் எதுவுமே பார்க்கப்படவில்லை. பாரிய புல்டோசர்கள் கொண்டு அழிக்கப்பட்டு மண் அணைகள் பெரும் உயரமாகக் குவிக்கப்பட்டே இராணுவ நிலைப்படுத்தல் பலப்படுத்தல் என்பன ஆற்றப்பட்டன.

இத்தகைய சூழலிலேயே கடந்த 10 ம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் புலிகளின் மிகப் பெரிய தாக்குதல் அதிரடியாக தாண்டிக்குளம் - நொச்சி மோட்டைப் பகுதிகளில் இடம் பெற்றது. தலை அடியை ராணுவம் எதிர்பார்த்திருக்கப் புலிகள் பின்பக்கமாக வந்து குத அடி கொடுத்து அழிவுகளையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். எதிர்பாராத இத் தாக்குதலால் ராணுவத்தில் பலத்த பாதிப்புக்கள் உள்ளாவும் வெளியாகவும் ஏற்பட்டுள்ளமையை எத்தகைய பிரசாரத்தாலும் மறைத்துக் கொள்ள முடியாதுள்ளது. இத்தாக்குதலுக்கு புலிகள் வைத்துள்ள தாக்குதல் பெயர் 'செய் அல்லது செத்துமடி' என்பதாகும். 'எதிரி முன்னேறும் போது பின்வாங்கு, எதிரி தூங்கும் போது தாக்கு, எதிரி பின் வாங்கி ஓடும் போது துரத்தி அடித்து அழி' இவ் இராணுவ உத்தி முறை மரபு வழி இராணுவத்திற்குரிய ஒன்றல்ல. ஒரு சக்திமிக்க கொரில்லா இராணுவத்துக்கு வகுத்து கொடுக்கப்பட்ட ஒன்றாகும். இக் கொரில்லா வழிமுறையைப் புலிகள் பயன்படுத்தி அதனால் பலன் அடைந்திருக்கிறார்கள் என்று கூற முடியும். மேலும் எதிரியின் பலத்தை அறிந்து அதனிலும் கூடிய பலத்துடன் தாக்குவது என்பதையும் புலிகள் செய்துள்ளார்கள். இச் 'செய் அல்லது செத்துமடி' தாக்குதலைத் தொடுத்து பதினைந்தாவது நாள் மீண்டும் 25ம் திகதி அதிகாலையில் இடைபுகுந்து தாக்கும் ஒரு தாக்குதலைச் செய்திருக்கிறார்கள். புளியங்குளத்திற்கு முன்பாக உள்ள பெரியமடு என்னும் பகுதியில் இத்தாக்குதல்களிலும் இராணுவத்திற்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டுள்ளன. மேற்கூறிய இரு அதிரடித் தாக்குதல்களிலும் இராணுவத்திற்கு மட்டுமன்றி புலிகளுக்கும் அதிகளவு சேதங்களும் இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. வழக்கத்தில் இரு தரப்பும் எதிர்த் தரப்பு இழப்புகளை மிகைப்படுத்திக் கூறி வருகின்ற போதிலும் இருபுறத்திலும் பெருந்தொகை உயிர் இழப்புகளும் படுகாயங்களும் ஏற்பட்டுள்ளன என்பது மறைப்பதற்கில்லை.

இவ்வாறு 'வெற்றி நிச்சயம்' எனப்படும் வன்னிப் போர் வடக்கு நோக்கி நகர நகர பயங்கர யுத்தமும் இழப்புக்களும் நீடித்துச் செல்லப் போகின்றன. யுத்தம் எக்காரணம் கொண்டும் நிறுத்தப்பட மாட்டாது என யுத்தத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மீண்டும் மீண்டும் சூளுரைத்து வருகிறார். வடக்கு நோக்கி முன்னேறுங்கள் என்று உத்தரவுகளும் ஆணைகளும் இடப்பட்டு வரும் வேளையில் 'வெற்றி நிச்சயம்' தெற்கு நோக்கிய பல தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. நாளாந்தம் தெற்கு நோக்கி ராணுவ வீரர்களின் உயிரற்ற உடலங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் யார்? அவர்களது வயது என்ன? ஏன் போர் முனைகளில் செத்து மடிய விடப்பட்டுள்ளார்கள்? உயிரற்ற உடலங்கங்களாக எஞ்சி வருபவவற்றைத் தமது வீடுகளில் வைத்து மரண வீடு நடாத்த முடியாத அளவுக்கு ஏழ்மையான சிங்கள தொழிலாளர்கள் விவசாயிகளின் இளம் வயது இளைஞர்களே பெருமளவில் சாகடிக்கப்பட்டு வருகிறார்கள். அது மட்டுமன்றி படுகாயமடைந்து வருவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. அத்தகையவர்கள் எதிகாலத்தில் படைகளில் இருப்பதற்கு தகுதியற்றவர்களாகுவதுடன் சொந்த வாழ்க்கையிலும் முடமாக்கப்படுகின்றனர். இறந்து வரும் ஆயிரக்கணக்கான படைவீரர்களின் விதவை மனைவிமாரும் தந்தையற்ற குழந்தைகளின் எதிர்காலம் அள்ளி தெளிக்கப்படும் அற்ப உதவிகளுக்கும் துடப்பால் இருள்சூழ்ந்த எதிர்காலமாகவே தெற்கில் காணப்படுகின்றது. இவை மட்டுமன்றி தெற்கில் பல்வேறு பொருளாதார சமூகப் பிரச்சினைகள் பூதாகாரமாகி வருவதற்கும் இன்றைய யுத்தம் ஒரு பிரதான காரணியாகி நிற்கின்றது.

வெற்றி நிச்சயம் எனக் கூறி யுத்தத்தின் எண்பது வீதத்தை வென்றுவிட்டதாகக் கூறிக் கொள்ளும் போது இவ் யுத்தத்தின் மறைவில் பற்பல வழிகளில் பணம் சேர்ப்போர் சேர்த்துக் கொண்டே இருக்கிறார்கள். வடக்கு கிழக்கிற்கு அனுப்பப்படும் தரமற்ற உணவுப் பொருட்களில் இருந்து ஆயுத உற்பத்தி தளபாடங்கள், உதிரிப் பாகங்கள், ஏன் வாங்கப்படும் விமானங்கள், கப்பல்கள் வரை தரகுப் பணம் கட்டுக் கட்டாகப் பெறப்படும் நிகழ்வுகள் தெற்கே ஆரவாரமின்றி சாதாரணமாகவே இடம் பெற்று வருகின்றன. எனவே தேசத்தைப் பாதுகாப்பதை விடத் தத்தமது பைகளை நிரப்பி தமது வர்க்க வளர்ச்சியைப் பாதுகாப்பதையே ஆளும் வர்க்கம் காத்து வருகிறது. உண்மையில் தேசத்தின் மீதும் மக்களின் மேலும் அக்கறை இருந்தால் யுத்தநிறுத்தமும் அரசியல் தீர்வும் என்றோ வந்திருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

அவ்வாறு நோக்கப்படாது யுத்தமுனைப்பு நாளாந்தம் வளர்க்கப்பட்டு இன்று வன்னிப் போரில் வெற்றி நிச்சயம் என்று கூறி யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது. இது தெற்கில் பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தவே செய்யும். அது மட்டுமன்றி வன்னிப் போர் யுத்த வெறியர்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு வெற்றி பெறுமா என்பதும் கேள்விக்குறியாகிறது. அதேவேளை விடுதலைப் புலிகளும் வெறுமனே ராணுவத் தாக்குதல்களையும் அதனால் பெறப்படும் வெற்றிகளையும் மட்டும் முன்னெடுத்துச் செல்வது எவ்வளவு தூரத்திற்கு என்பது சிந்திக்கப்பட வேண்டியதாகும். இன ஒடுக்குமுறைக்கும் பேரினவாத அகங்காரத்திற்கும் எதிராகப் போராட வேண்டியது தவிர்க்க வியலாத ஒன்று. ஆனால் அதற்கு தனியே ராணுவ வ்ழிமுறை மட்டும் போதாது. ஒடுக்கப்பட்ட சகல தேசிய இனங்களினதும் ஒன்று பட்ட சக்தியும் குரல்களும் ஒருமுகப் படுத்தப்படுவதன் அவசியம் உணரப்பட வேண்டும். அதே போன்று தெற்கின் உழைக்கும் மக்களினதும் அவர்களது அரசியல் இயக்கங்களின் ஆதரவைப் பெறுவதும் அவசியத் தேவையாகும்.

ஆதலினாலே வெற்றி நிச்சயம் வன்னிப் போர் நிறுத்தப்பட்டு அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படல் வேண்டும். இந் நியாயமான வேண்டுகோள்கள் காதுகளைக் கவசங்களால் மூடிக் கொண்டு யுத்த வெறிச் சன்னதமாடி நிற்கும் அரசாங்க உயர் மட்டத்தினருக்கு புலப்படுத்த பல்லாயிரம் பல லட்சம் மக்களின் குரல்கள் ஒன்றுபட்டு ஓங்கி ஒலிக்க வேண்டும். அது யுத்தத்தை நிறுத்து! பேச்சுவார்த்தையை ஆரம்பி! அரசியல் தீர்வுக்கு வா! என்பதாக அக்குரல்கள் அமைய வேண்டும். இதுவே வடக்கு நோக்கிய யுத்தத்தை தடுத்து நிறுத்த தெற்கில் ஆற்றவேண்டிய பணி. இதற்கு யுத்தத்தை எதிர்க்கும் சகலரும் ஓரணி திரள்வது அவசியம்.

நன்றி - நூலகத்திட்டம்



முஸ்லிம் தேசமும்
எதிர்காலமும்.
விக்ரர்,
மூன்றாவது மனிதன்
வெளியீடு, கொழும்பு,
1997 பெப்ருவரி,
148 + 10 ப.,
ரூ.120.00

# முஸ்லிம் தேசமும் எதிர்காலமும்.




தேசமாக வரையறுக்கப்பட்ட மக்களுக்கே தமது அடையாளத்தைப் பேணும் முறையிலான சுயநிர்ணய உரிமை உண்டு என்ற மயக்கம் சிலரிடம் மிகவாகவே உள்ளது. விளைவு? ஒடுக்கலுக்கும் அடையாள அழிப்புக்கும் ஆளாகும் ஒவ்வொரு சமுதாயப் பிரிவையும் தேசமாகவோ குறைந்தபட்சம் தேசிய இனமாகவோ காட்டும் முயற்சிகள். பல சமயம் இத்தகைய முயற்சிகள் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரிடையினின்றே எழுகின்றன. அபூர்வமாக இத்தகைய முயற்சிகள் அச்சமூகங்கட்கு வெளியிலிருந்து வரும் போது நனைகிற ஆட்டுக்காக அழுகிற பிராணியின் வினைவு வருவது தவிர்க்க இயலாதது தான்.

பின் கூறப்பட்ட முயற்சியையொத்த ஒன்று முஸ்லிம் தேசம் பற்றி 'விக்ரர்' எழுதியுள்ள நூல். ஏராளமான குழறுபடிகளும் திரிப்புக்களும் உள்ளன.

நூலில் புதிதான தகவல்களும் அதிகம் இல்லை. உள்ள தகவல்களைக் கையாளுவதில் தவறுகள் பல. இவைபற்றி விரிவுபடுத்துவதற்கு முன், நூலின் முக்கிய செய்தியை நோக்குவது பயனுள்ளது. அதை விளங்கிக் கொண்டால் மற்றக் குழறுபடிகளை விளங்கிக் கொள்வதற் சிரமம் இராது.

நூலாசிரியரின் பிரதான முடிபுகள் பின்வருமாறு:

1) வட கிழக்கு முஸ்லிம்கள் ஒரு தேசம்
2) 'தமிழ் தேசத்தினுள்' முஸ்லிம்களின் சுயநிர்ணயத்தை (பிரிந்து செல்லும் உரிமையை) ஆதரிக்கும் நடவடிக்கைகள் அவசியம்

முன்னையதை நிறுவத், தேசம் என்றால் என்ன என்பதன் வரைவிலக்கணம் கணிசமான அளவுக்கு வளைத்து இழுத்து முறுக்கப்பட்டு இருக்கிறது. அது மட்டுமன்றி, ஒரு முஸ்லிம் தேசத்தைச் சாத்தியமான ஒன்றாகக் காட்டும் தேவைக்காக, வட கிழக்கு முஸ்லிம்கள், தொகையில் அவர்களை விட அதிகமாக உள்ள தென்னிலங்கை முஸ்லிம்களிடமிருந்து வேறுபடுத்தப் பட்டுள்ளார்கள்.

தேசங்கள் வரைவிலக்கணங்களால் உருவாவதில்லை. எந்த வரைவிலக்கணமும் ஒன்றை விளங்கிக் கொள்ளவும் அடையாளங் காணவும் உதவும் ஒரு சாதனமே தான். ஒன்றைத் தேசம் என்றோ இல்லை என்றோ வெட்டொன்று துண்டு இரண்டு என்ற விதமாக வகுக்கவல்ல வரைவிலக்கணம் எதுவுமில்லை. பொதுவான மொழி, தொடர்ச்சியான பிரதேசம், பொதுவான பொருளாதாரம் பொதுவான வரலாற்று அனுபவம் என்பனவற்றை ஒரு தேசத்தின் பொது அடையாளங்களாகக் கண்ட ஸ்தாலின் அவை அனைத்துமே இருக்காவிட்டால் ஒரு மக்கள் திரள் தேசமாக மாட்டாது என்று கூறவில்லை. மேற்கூறிய பண்புகளின் முக்கியத்துவம் தேசம் என்பதைத் தேசிய அரசு என்ற நடைமுறைத் தேவையுடன் இணைத்துக் காண்பதிலேயே தங்கியுள்ளது.

மதம் நிறம் போன்றன மக்களை வேறுபடுத்தினாலும் அவற்றின் அடிபபடையில் தேசங்கள் அமைவதில்லை. இஸ்ரேல், யூதமதம் என்ற அடிப்படையில் அல்லாது யூத இனமும் அதன் பொதுவான வரலாற்று அனுபவமும் என்பதை ஆதாரமாக வைத்தே மறுபடி உருவாக்கப்பட்டது. அதன் உருவாக்கத்தில் நீண்டகாலமாக ஐரோப்பாவில் நிகழ்ந்த யூத இன ஒடுக்குதலுக்குப் பெரிய பங்கு உண்டு. இந்தியா எவ்வாறு ஒரு தேசம் இல்லையோ, அவ்வாறே மதத்தை ஆதாரமாக வைத்துப் பிரித்தெடுக்கப்பட்ட பாகிஸ்தானும் ஒருதேசமாக இல்லை. பிரதேச ரீதியான தொடர்ச்சியற்ற பாகிஸ்தான் பிளவுபட்டது மட்டுமன்றி இன்று வேறுபட்ட தேசிய இனங்களைக் கொண்ட கூட்டாட்சியாகவே அதன் இருப்பு இயலுமாகி விட்டது. மத அடிப்படையில் ஒரு மக்கள் திரள் ஒடுக்கப்பட்டால் அந்த அடிப்படையில் அவர்கள் ஒன்றுபட்டுப் போராடும் தேவை ஏற்படுகிறது. இதற்கும் மேலாக அவர்கட்கு ஒரு பொதுவான தனித்துவமான சமுதாய வரலாறும் இருந்தால் அவர்கள் தமது தனித்துவத்தை மேலும் வலியுறுத்த இடமுண்டு. அது ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையிலோ தேசமாகவோ அமைவது அதைச் சாத்தியமாக்கக் கூடிய சூழல்களிலேயே தங்கியுள்ளது.

இலங்கை முஸ்லிம்களதும் மலையகத் தமிழர்களதும் தனித்துவத்தைத் 'தமிழ் பேசும் மக்கள்', 'தமிழ் ஈழம்' என்ற பேர்களின் கீழ்த் தமிழ்த் தேசியவாதிகள் அமுக்க முனைந்த போது அந்த மக்களது தனித்துவம் பற்றி மாக்ஸிய - லெனினிஸிய சக்திகள் சுட்டிக்காட்டின. அன்று அவர்களைத் தமிழ் இனத்துரோகிகள் என்று பழித்த தேசியவாதிகள் இன்று அந்த உண்மையைப் பெருமளவும் உணர்ந்துள்ளார்கள். அவர்களில் ஒரு சிலர், இன்று மறு அந்தத்திற்கு தாவி, முஸலிம் தேசம் பற்றிப் பேசுவது வினோதமானது தான்.

முஸ்லிம் தேசத்தைச் சாத்தியமாக்குவதற்காக 'விக்ரர்' மிகவுந் தான் கஷ்டப்பட்டு விட்டார். அதற்கு விலையாக இலங்கை முழுவதும் பரவி வாழும் முஸ்லிம்களது பொதுவான பண்புகள் அனைத்தையும் விட வடகிழக்கு தென்னிலங்கை முஸ்லிம் மக்களது சமுதாயச் சூழல்களில் உள்ள சில வேறுபாடுகள் பெரிதுபடுத்தப்படுகின்றன. அதே சமயம் வடக்கின் முஸ்லிம்களின் தலைமை கிழக்கு முஸ்லிம்களது தலைமையை நிராகரிப்பதுடன் தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பகுதியாகவே தம்மைக் கருத முனைவதையும் விக்ரர் காண விரும்பவில்லை. அம்பாறை மட்டக்களப்பில் தமிழருக்கும் முஸ்லிம்கட்கும் மத்தியில் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்ட சூழ்நிலைக்கும் திருகோணமலையில் அவை தோன்றிய சூழ்நிலைக்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. வட மாகாண முஸ்லிம்களின் நிலைமை இவற்றினும் வித்தியாசமானது. 'விக்ரரின்' நூலில் இது பற்றிய அறிவோ அக்கறையோ அற்ப அளவிற்கூட இல்லை.

தென்னிலங்கை முஸ்லிம்கள் பற்றிய கவலையே இல்லாது ஒரே தாயகத்தில் இரு தேசங்களாக நிலவுகிற தமிழ்; (வடக்கு கிழக்கு) முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ்வதன் அவசியத்தை விளங்குகிற விக்ரரால் அதே வாதத்தைத் தமிழ் - சிங்கள தேசிய இனங்கட்கு ஏன் பிரயோகிக்க முடியவில்லை?

தெற்கு முஸ்லிம் தலைமை பற்றிக் கடுமையான கண்டனத்தை முன் வைக்கும் விக்ரர், இதே விதமான தலைமையே தமிழர்கட்கும் சிங்களவர்கட்கும் நெடுங்காலமாக இருந்து வந்தததையும் கூறியிருக்கலாம். தென்னிலங்கை முஸ்லிம்களை ஒதுக்கி வைக்க இந்த அரசியற் தலைமையை இயலுமாக்கிய சூழல் உதவுமென்றால், வடக்கிலும், கிழக்கிலும் தமிழர் செறிவாக வாழும் இடங்கட்கு வெளியே உள்ள தமிழ் மக்கள் அவர் கூறும் தமிழ்த் தேசத்தினுள் அடக்குவார்களா என்பதை அவர் தெளிவுபடுத்தினார் நல்லது.

தேசங்கள் உருவாவது வெறுமனே தற்செயலான வரலாற்று நிகழ்வு என்ற விதமான விக்ரரின் வாதம் வட-கிழக்கு முஸ்லிம்களை ஒரு தேசமாக்கும் அகச்சார்பான தேவையினின்று எழுதுவது தான். இந்த நூலில் முன் வைக்கப்பட்டுள்ள வாதங்களைப் பார்க்கும் போது சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு நீண்ட கால வரலாற்றைக் கொண்ட தாழ்த்தப்பட்ட சாதியினர் ஒரு தேசமாக மாட்டார்களா? தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் வாழும் ஒவ்வொரு தமிழ்ச் சாதிப்பிரிவினிலும் காணப்படும் அகமண முறையும் ஒவ்வொரு சாதிக்கும் இருந்து வரும் பொதுவான பண்பாட்டுக் கூறுகளும், மரபும் வரலாறும் ஒவ்வொரு சாதியையும் தனித் தனித் தேசமாக்கி விடாதா? இங்கே வடக்கு கிழக்கு முஸ்லிம் தேசம் என்ற தொப்பிக்கு அளவாகத் தேசம் என்ற கோட்பாட்டின் தலையை வெட்டிச் சிதைத்ததை விட வேறெதையும் விக்ரர் சாதிக்கவில்லை.

முஸ்லிம்களது வரலாறு பற்றி விக்ரருக்கு உள்ள அக்கறையின் போதாமை மலாய், இந்திய முஸ்லிம் சமுதாயங்கள் பற்றி அவரது அசட்டையில் மட்டுமன்றிப் பிரகவனயீனமான கூற்றுக்களிலும் தெரிகிறது, TB ஜாயா எனும் பிரதான முஸ்லிம் தலைவர் மலாய் சமூகத்தவர் என்பதும் கள்ளத் தோணிகள் என அழைக்கப்பட்டோர் மலையகத் தமிழரே அல்லாது முஸ்லிம்களல்ல என்பதும் விக்ரருக்கு விளங்க நியாயம் இல்லை. கொக்குக்கு ஒன்றே குறி என்கிற மாதிரி, விக்ரரும் வடக்குக் கிழக்கு முஸ்லிம் தேசத்தையே குறியாகக் கொண்டு தனது 'ஆய்வை' நடாத்தியிருக்கிறார். ஜீ.ஜீ.பொன்னம்பலம் முன்வைத்த 'ஐம்பதுக்கு ஐம்பது' பிரதிநிதித்துவத்தை வடக்கின் தமிழர்கள் தவிர்ந்த பிற சிறுபான்மையினரின் தலைவர்கள் நிராகரிக்கக் காரணம் விக்ரர் கூறுவது போல முஸ்லிம் தலைவர்களது சந்தர்ப்பவாதமல்ல. அந்த '50-50' யாழ்ப்பாண வேளாளத் தமிழர்களது ஆதிக்கத்தை உறுதி செய்யும் நோக்கை உடையது என்பதாலேயே அது தோல்வி கண்டது. இவ்வாறு தமிழ்த் தேசியவாதிகள் கூறி வந்துள்ள வரலாற்றுத் திரிப்புகளை கொஞ்சமாவது ஆராயாமல் எழுதுகிற விக்ரரின் வாதங்களில் உள்ள குழறுபடிகள் ஏராளம். மட்டக்களப்பில் தமிழ், முஸ்லிம் மோதல்களையும் 'சைவ -வேளாள' சித்தாந்த ஆதிக்க அடிப்படையில் விளக்க முனையும் விக்ரருக்குத் தேசம் பற்றியும் முஸ்லிம்கள் பற்றியும் தெரிய வேண்டியது அதிகம். தமிழ்த் தேசியவாதத்தின் குறுகிய கால வசதிகட்காக இந்த முஸ்லிம் தேசக் கோமாளித்தனத்தை முன்வைக்கும் தேவை சிலருக்கு இருக்கலாம். இதன் தத்துவார்த்த தளம் மிகவும் பலவீனமானது தமிழர்கள் முஸ்லிம் தேசம் என்ற கோட்பாட்டை ஏற்கிறார்களோ என்பது ஒருபுறமிருக்க, முஸ்லிம்களே அதை ஏற்பார்களோ என்பது தான் முக்கியமானது.

**தேசபக்தன்.**

---

**கோணேஸ்வரி விவகாரம் :**

## சட்டத்தின் முன் நிறுத்தினால் மட்டும் போதாது

கடந்த மே மாதம் 17ம் திகதி இரவு கிழக்கிலங்கையில் முருகேசு கோணேஸ்வரி என்ற 35 வயது நான்கு பிள்ளைகளின் தாயான குடும்பப் பெண் ஒருவர் பொலிஸாரால் மிருகத்தனமாக பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு இறுதியில் அவரது பெண்உறுப்பில் கிரனைட் பொருத்தி வெடிக்க வைத்து கொல்லப்பட்டார். இதையிட்டு உலகமோ அன்றி நாடோ அதிர்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் இதுபோன்ற மிருகத்தனம் முதற்தடவையும் அல்ல. தனியே ஒன்று மட்டுமல்ல. சர்வசாதாரணமாக பாதுகாப்புப் படைகளால் செய்யப்படும் அன்றாடக் கடமைகள் போல் ஆகி விட்டது. இதுவரையில் வெளியில் கொண்டு வரப்பட்டவைக் விசாரணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தண்டனைகள் கிடைக்கலாம் அல்லாது விடின் சட்டத்தின் ஓட்டைகளின் வழியாக விடுதலையும் கிடைக்கலாம் சம்பந்தப்பட்ட பொலிஸாருக்கு அல்லது ஆயுதப்படையினருக்கு. அல்லது பொல்கொட வாவியிலும் களனி ஆற்றிலும் மிதந்து வந்த இளைஞர்களின் கொலைகளில் சம்பந்தப்பட்ட அதிரடிப்படை வீரர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் போல் சட்டத்தை வளைத்து அல்லது முறித்து ஏதாவதும் நடைபெறலாம். ஏன் லோகன் ரத்வத்தைக்குக் கிடைத்த தீர்ப்பைப் போல் ஆகலாம். எல்லாம் சட்டத்தின் முன் சமம்தான். ஆனால் சம்பந்தப்படும் நபர்களையும் செல்வாக்கையும் பொறுத்துத்தான் சமன் சமன்இன்மையைக் கண்டு கொள்ள முடியும்.

நிற்க தற்போது கிழக்கிலங்கை விடயம் அம்பலத்திற்கு வரவே ஜனாதிபதி உத்தரவிட்டு புதைக்கப்பட்ட சடலம் தோண்டி எடுக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்படுகிறது. ஆரம்பத்தில் ஆ! ஓ! என்றுதான் இருக்கும். காலம் செல்லச் செல்ல அவை பழைய கோப்புகளாகி தூசு படிந்து விடும். அத்துடன் அதனையும் விடப் புதிய மிருகத்தனமான பாலியல் வல்லுறவுகளை பாதுகாப்புப் படையினர் கண்டுபிடித்து செய்தும் விடுவார்கள். கிரிஷாந்தி, ரஜினி ஆகியோரின் பரிதாப முடிவுகளை நாடு கேட்டு மறந்து போகும் நிலையிலேயே கோணேஸ்வரிக்கு இக்கதி ஏற்பட்டது.

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

நன்றி - நூலகத்திட்டம்




# மண்டை ஓடு கடத்தலில் இந்தியா

இந்தியாவில் மீண்டும் ஒரு மண்டை ஓடு கடத்தல் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்தத்தடவை பீகாரின் புத்த காயாவில் அல்ல. இச்சம்பவம் மேற்கு வங்கத்தின் எல்லைப்புறமாக உள்ள பீகாரின் நகரான அண்சேர் நகரில் இடம் பெற்றுள்ளது.

அண்மையில் நியாமற்பூர் கிராமத்து ஆதிவாசிகள் வைசாவ் இந்து மயானத்திலிருந்து ஆறு உடல்கள் மாயமாக மறைந்ததை கண்டனர். பொலீசும் உள்ளூர் வாசிகளும் இது அரசமட்டத்தின் உதவியுடன் இடம்பெறும் கைங்காரியம் என அஞ்சுகின்றனர்.

இவ்வாறாக உடல்களை கிளறி எடுத்து அப்புறப்படுத்தும் சம்பவங்கள் முன்பும் இம்மயானத்தில் இடம் பெற்றிருக்கின்ற போதும் ஒரே சமயத்தில் இத்தனை மனித எலும்புக்கூடுகள் அப்புறப்படுத்தப்பட்டது இந்த தடவைதான்.

''த ரெலிகிராப்'' பத்திரிகையில் வெளியான அறிக்கையின்படி சில தினங்களுக்குமுன் ஒரு தொகையினரான ஆதிவாசிகள் தாம் புதைத்த பூதஉடல்களுக்கு கிரியைகள் செய்வதற்காக சென்ற போது புதை



குழிகள் தோண்டப்பட்ட நிலையில் உடல்கள் அப்புறப்படுத்தப்பட்டு இருந்ததை கண்டனர்.

சம்பவம் பொலீசாருக்கு அறிவித்த போது ஒரு திட்டமிட்ட கும்பல் ஒன்று இந்த எலும்புக்கூடு கடத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளது என தாம் நினைப்பதாக தெரிவித்தனர்.

சென்ற வருடம் யூன்மாதத்தில் மண்டை ஓடுகளும் எலும்புகளும் ஒரு சாக்கில் பீகாரின் புத்த காயாவில் பால்குனி ஆற்றுக்கரையில் கண்டெடுக்கப்பட்டது. இவற்றை புதுடில்லியின் உள்ள இந்திய பகுப்பாய்வு நிலையத்தில் பரிசீலனை செய்த போது அந்த மண்டை ஒடுகள் 25-30 வயதுக்கு இடைப்பட்டவர்களுடையதென தெரிவித்தது.

இந்த வருடம் ஜனவரி 30 ல் முப்பது மண்டை ஓடுகள் கதிகார் புகையிரத நிலைய குப்பைத் தொட்டியில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து மேலும் 98 மண்டை ஓடுகள் எடுக்கப்பட்டன. இவ்வருடம் மார்ச் 10 ல் மடுபானி புகையிரத நிலையத்தில் றெயில்வே பொலீசார் பல மனித எலும்புக்கூடுகளை கண்டெடுத்தனர். பிரயாணிகள் புகைவண்டியின் ஒரு மரப்பெட்டியில் இவை கிடக்கக் காணப்பட்டன.

நாட்டின் கிழக்குப் பகுதியில் பங்களாதேஷ், நேபாள எல்லைக்கு அண்மையாகவே இந்தக் கடத்தல்கள் இடம்பெறுகின்றன எனத் தெரியவருகிறது. பாரதபூமி புண்ணிய பூமி என இன்றும் தான் உரத்துக் கூறப்பட்டு வருகிறது. ஆனால் ஆளுவோரும் அதிகாரம் செலுத்துவோரும் புண்ணியவான்கள் அல்லவே. அந்த நாட்டின் சமூக அமைப்பும் மக்களுக்குரியதாக இல்லையே.

# யப்பானில் வீடில்லா பிரச்சினை

டோக்கியோ, நாகோயா, ஹிரோசிமா, ஒசாகா போன்ற நகரங்கள் யப்பானின் செல்வம் செறிந்த நிலைக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்ற அதேவேளை அந்நகரங்களின் வீதிகள் வீடில்லா மக்களுக்குப் புகலிடமாய் விளங்குகின்றன என்பது பலருக்கு வியப்பாக இருக்கக்கூடும்.

தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி 20,000 டொலர் களாயுள்ள நாட்டில் வீடில்லாதவர்களின் வசிப்பிடமாக பாலங்களின் கீழப்புறம், பூங்காக்கள், புகையிரத நிலையங்கள் என்பனவற்றில் காட் போட் மறைப்புகளிலான குடில்களாகக் காணப்படுகின்றன.

1996 ஆகஸ்டில் டோக்கியோ நகராட்சி மன்றம் நடாத்திய கணிப்பின்படி டோக்கியோ நகரில் 3000 பேர் வீடில்லாதவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 40% மானோர் 50 வயதுடையவர்கள். அவர்களில் கணிசமானவர்கள் நோய் வாய்ப்பட்டுள்ளனர். இரட்சன்ய சேனையின் கணிப்பின்படி வீடில்லாதவர்களின் எண்ணிக்கை 5000 யிரத்திற்கும் 10000 யிரத்திற்குமிடைப்பட்டதாயிருக்குமென்கிறது.

இந்த எண்ணிக்கையானது ஐரோப்பாவில் காணப்படும் நிலையிலும் மிகச் சொற்பமானதே. அமெரிக்காவில், நியூயோக் நகரில் மாத்திரம் வீதியோரங்களிலும் தற்காலிக மறைப்புகளின் கீழும் வீடற்றோர் ஒரு இலட்சம் பேர் வாழ்கின்றனர். யப்பானிலும் இந்த நிலை உருவாகுமென யப்பானிய அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

''முன்பெல்லாம் வீடில்லாதவர்கள் ஒதுக்குப்புறமாக இருந்தனர். ஆனால் இப்போதெல்லாம் வீதிகளில் வெளிப்படையாக காணப்படுகின்றனர்'' என யப்பானில் நிலவும் வீடில்லா பிரச்சினையை சோபியா பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்யும் அமெரிக்க சமூக விஞ்ஞானி ரொனி குசெவிக்ஸ் கூறுகிறர்.

பிரச்சினை தற்போது மோசமாய் இல்லை எனக் கூறும் அவர் இது வெளிப்படையாகவுள்ளது என்கிறார். வியாபாரிகளும், கடை உரிமையாளர்களும் வீடில்லாதவர்களை பாதை ஓரங்களிலிருந்து அப்புறப்படுத்த வேண்டுமெனக் கோருகின்றனர். அவர்களால் தம் கள் வியாபாரம் பாதிக்கின்றது என கின்றனர்.

சென்றவருடம் ஜனவரியில் ஒனிசி என்ற நகரின் மண்டபத்திற்கருகாமையில் இருந்த காட்போட் சேரியை டோக்கியோ பொலிஸ் வெளியேற்ற முற்பட்ட போது பொலிசாருக்கும் கோபங்கொண்ட வீடற்றவர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. 1994 பெப்ரவரியில் டோக்கியோ அதிகாரிகள் நகரின் மிகப்பெரிய புகையிரத நிலையமான ஷின்யூக்கூவிலிருந்து வீடற்றவர்களை வெளியேற்றியது. அவ்விடத்திற்றான் யப்பானில் வீடற்றவர்களில் ஆகக் கூடுதலானோர் இருந்தனர்.

யப்பானின் அபரீதமான வளர்ச்சி பற்றிக் கூறப்பட்டுவரும் வேளையில தான் காணப்படும் இது போன்ற பொருளாதார சமூகப் பிரச்சினைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. யப்பான் பல்வேறு துறைகளில் அபரீத வளர்ச்சி கண்டுள்ளது என்பது உண்மை. ஆனால் அந்த வளர்ச்சியின் வளங்கள் பலாபலன்கள் யப்பானிய மக்கள் அனைவருக்கும் சென்றடைவதில்லை. அவை குறிப்பிட்டவர்களின் கைகளுக்கும் பைகளுக்குமே சென்றடைகின்றன. அதன் பன்முக வெளிப்பாடுகளின் ஒன்றே வளர்ந்து வரும் வீடற்றோர் பிரச்சினை.

# பொல்பொட்டுடன் போய் விடுமோ?

செங்க்மெர்கள் (க்மேற் றூஷ்) என அறியப்பட்ட காம்போஜ (கம்போடியா) தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவரான பொல் பொட் பிடிக்கப்பட்டுவிட்டார் என்ற செய்தி உறுதிப்படுத்தப்படுமுன்னரே பல்வேறு கோணங்களிலிருந்தும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டுள்ளது. பொல்பொட்டின் வீழ்ச்சி மாக்ஸியப் புரட்சியாளர்களது வீழ்ச்சி என்று முதலாளித்துவ ஏடுகள் குதூகலிக்கின்றன். பயங்கரவாதத்தின் வீழ்ச்சி என்று அடக்குமுறை அரசாங்கங்களும் கொண்டாடுகின்றன. விடுதலைப் புலிகளுடன் பொல்பொட்டின் படைகளை ஒப்பிட்டு இலங்கையின் பேரினவாதிகளும் அரச சார்பு பத்திரிகைக்காரர்களும் அகமகிழ்கிறார்கள். அத்தனை பேருடைய கணிப்பிலும் ''தோள் கண்டார் தோளே கண்டார்'' என்ற கம்பரின் கவிதை வரியினை போல தமக்குப் பிடித்தமான அம்சம் மட்டுமே தெரிகிறது. காம்போஜத்தின் கொடிய யுத்தத்தின் வரலாற்றுப் பின்னணி பற்றிய அக்கறை எவருக்கும் இல்லை. அது பற்றிக் கவனித்தால் இப்போருக்குக் காரணமாக நின்றவர்கள் யார் என்ற உண்மை தெரிந்துவிடும். எனவே பொல்பொட்டை மட்டுமே பிரச்சினையாகக் காட்டி பொல்பொட்டின் முடிவு பிரச்சினையின் தீர்வு என்று நம்ப வைப்பது இவர்கள் எல்லாருக்கும் வசதியாக உள்ளது.

வியற்நாம் விடுதலைப் போரில் வட வியற்நாமுக்கும் அமெரிக்க ஆக்கிரமிப்புக்குள்ள தென். வியற்நாமுக்கு இடையே இடையே விடுதலைப் போராளிகள் போய் வரும் வசதி தவிர வேறெந்த வகையிலும் அவ் விடுதலைப் போரில் காம்போஜம் ஈடுபட்டதாகக் கூறமுடியாது.

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

# 'இவர்' யார்?



இவர்தான் கம்போடிய கம்யூனிஸ்ட் தலைவர் பொல்பொட். இவர் 1928ஆம் ஆண்டு கம்போடியாவின் கொம்போங்தோம் மாகாணத்தில் பிறந்தார். இளமையில் பௌத்த பிக்கு மாணவனாக இருந்தார். புலமைப் பரிசில் பெற்று பிரான்சிற்கு சென்றார். அங்கு மாணவராக இருந்தபோது தீவிர அரசியலில் ஈடுபட்டதால் கல்வியைப் பூர்த்தி செய்யவில்லை. நாடு திரும்பி அவர் ஆசிரியராக கடமையாற்றினார். பிரான்சிய காலனித்துவவாதிகளுக்கு எதிரான இயக்கத்தில் முக்கிய போராளியாக இருந்த இவர் தலைமறைவாகவே வாழ்ந்தார்.

கம்போடியா கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக 1963 இல் தெரிவு செய்யப்பட்டார். 1968 இல் கம்போடிய பிற்போக்கு அரசிற்கு எதிரான கெரில்லா யுத்தத்தை ஆரம்பித்தார். இவரின் இயக்கத்தை கம்போடிய பிற்போக்கு அரசாங்கம் 'கெமரூச' என்றே அழைத்தது.

1975 இல் அமெரிக்காவிற்கு எதிரான கம்போடிய போரை முன்நின்று நடத்தி கம்போடியாவுக்கு வெற்றியீட்டிக் கொடுத்தார். 1975 - 1979 வரை இவர் கம்போடிய நாட்டின் தலைவராக இருந்தார்.

1979 இல் வியட்னாம் படைகள் கம்போடியாவை ஆக்கிரமித்து பொல் பொட் தலைமையிலான சோஷலிஸ அரசைக் கவிழ்த்து ஹெங்சமரின் தலைமையிலான பொம்மை அரசை அமைத்தன.

1975 - 79 காலத்தில் 10 லட்சம் கம்போடிய மக்களை கொலை செய்தார் என்றும் ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபட்டார் என்றும் குற்றம் சாட்டியே வியட்னாம் கம்போடியாவை ஆக்கரமித்தது. அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டவே தலையிடுவதாக வியட்நாம் கூறியது. வியட்நாமின் மேற்படி பிரச்சாரங்களின் பின்னணியில் சோவியத் யூனியன் இருந்தது. ஏனெனில் பொல்பொட் தலைமையிலான கம்போடியா சீனாவுக்கு சார்பாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வியட்நாம் ஆக்கிரமிப்புக்குப் பிறகு வியட்னாம் படைகளுக்கும் வியட்னாமிற்கு சார்பான கம்போடிய பொம்மை அரசிற்கும் எதிராக கம்போடிய தேசிய ஜனநாயக முன்னணி ஆரம்பிக்கப்பட்டு அதற்கு ஆரம்பகால தலைவராக இவர் இருந்தார். இம்முன்னணியில் கம்யூனிஸ்டல்லாத ஜனநாயகவாதிகளும், தேசியவாதிகளும் இணைந்து செயற்பட்டனர்.

தேசத்தின் நன்மைக்காக கம்போடிய கம்யூனிஸ்ட் கட்சியை கலைத்து தேசிய ஜனநாயக முன்னணியை அமைத்தார். போட்டி அரசாங்கத்தை அமைத்தும் செயற்பட வழிகாட்டினார்.

இளவரசர் சிஹானுக் போன்ற பிற்போக்குவாதிகளும் கம்போடிய தேசிய முன்னணியில் இணைந்து இயங்குவதற்கு ஏதுவாக இவர் முன்னணியின் தலைமைப் பதவியையும் விட்டுக் கொடுத்தார்.

இவரின் குதத்தில் ஏற்பட்ட புற்றுநோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக சீனாவுக்கு சென்றார்.

கம்போடிய தேசிய ஜனநாயக முன்னணியின் போராட்டத்தினால் சமாதான உடன்படிக்கை ஏற்பட வழி ஏற்பட்டது. இளவரசர் சிஹானுக்கு தலைமையில் தேசிய ஜனநாயக முன்னணி பிரதிநிதித்துவம் செய்யப்பட்டதால் சமாதான உடன்படிக்கை பூரணமாக ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை. அவ்வுடன்படிக்கையையும், சிஹானுக்கின் நிலைப்பாட்டையும் சீனா ஏற்றுக் கொண்டதால் முரண்பட்டுக் கொண்டு சீனாவிலிருந்து இவர் வெளியேறினார். நாட்டிற்கு திரும்பிய அவர் கெமரூச் கெரில்லாக்களுடன் இணைந்து கொண்டார்.

அண்மையில் கெமரூச் இயக்கத்தில் பிளவு ஏற்பட்டு ஒரு பகுதியினர் அரசாங்கத்துடன் இணைந்தனர். அரசாங்கத்திற்கு எதிராக இருந்த பகுதியினருடனேயே பொல்பொட் இருந்தார். அப்பகுதியினரால் பொல்பொட் கொல்லப்பட்டு விட்டார் என்றும் கூறப்படுகிறது.

சிறைப்பிடிக்கப்பட்டு, உயிருடன் வைக்கப்பட்டுள்ளார் என்றும் செய்திகள் கூறுகின்றன. எதுவும் பூரணமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

இவ்வேளையில் இவரின் ஆட்சிக்காலத்தில் இழைக்கப்பட்ட அதிதீவிர இடதுசாரிவாத தவறுகளை விமர்சனரீதியாக பார்ப்பதுடன் இவர் பிரான்சிய காலணியாதிக்கவாதிகளுக்கு எதிராகவும் அமெரிக்காவுக்கும், கம்போடிய பிற்போக்குவாதிகளுக்கும் எதிராகவும் முன்னெடுத்த போராட்டங்களையும் வியட்னாம் ஆக்கிரமிப்புக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தில் இவரின் பங்களிப்பையும், சரியானவை என்றும் நேர்மையானவை என்றும் கூறுவதில் நேர்மையான கம்யூனிஸ்ட்டுகள் பின்நிற்கமாட்டார்கள்.

ஆனால் மேற்கத்தேய அரசாங்கங்களும், அமெரிக்காவும் இவரை 20 இலட்சம் கம்போடிய மக்களை கொன்ற கொலையாளி எனவும் சர்வாதிகாரி எனவும் வர்ணித்து வருகின்றனர். 20 இலட்சம் பேர் என்பது கம்போடிய நாட்டின் முழு சனத்தொகையின் ஐந்தில் ஒரு பங்காகும். 4 வருட ஆட்சியில் ஐந்தில் ஒரு பங்கு சனத்தொகையை அழித்ததாக இவருக்கு எதிராக செய்யும் பிரசாரத்தை எந்தவொரு சாதாரண அறிவுடைய மனிதரும் நம்பமாட்டார்கள். ஆனால் அப் பிரசாரங்கள் ஓய்ந்தபாடில்லை. மேற்கின் ஊடகங்கள் கட்டவிழ்த்து விடுபனவற்றை அப்படியே திருப்பி ஒப்புவிக்கும் நமது நாட்டுப் பத்திரிகைகள் உட்பட யாவுமே பொல்பொட்டை கொலைகாரனாக்கி வருகின்றன. இதில் வியப்பு இருக்க முடியாது.

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக மக்களை ஏமாற்ற..

# ஐ.தே.க வின் புதிய பம்மாத்துக்கள்

மலையக மக்களின் முன்னேற்றத்திற்காக ஐ.தே.கட்சியினால் எதையும் செய்ய முடியாது. குறிப்பாக சொல்லப் போனால் மலையக மக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டனர் என்று இ.தொ.காதலைவர் தொண்டமான் கூறியதாக 26. யூன் 1996 அன்றைய தினகரனில் செய்தியொன்று வெளியாகியுள்ளது.

வந்து இந்திய வம்சாவளி மக்களை நாடற்றவர்களாக்கியதுடனேயே தொடங்குகிறது. ஐ.தே.கட்சியின் வரலாற்றை ஒழுங்காகப் பிடித்தால் இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகளை ஆராய உபகுழுவொன்றை நியமிக்க வேண்டிய அவசியமேற்படாது.

இந்திய வம்சாவளி மக்கள் அதிகமாக வாழும் ஐ.தே.கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேச சபைகளின் அலுவல்களை தமிழ் மொழியிலும் நடத்தப் போவதாக ஐ.தே. கட்சி அறிவித்துள்ளது.


மாகாணசபை சட்ட ஏற்பாடுகளின் படியும் ஆட்சி மொழிகள் சட்ட ஏற்பாடுகளின் படியும் வடக்கு கிழக்கிற்கு வெளியில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பிரதேச சபைகளின் அலுவல்களை தமிழிலும் நடத்த ஜனாதிபதி பிரகடனமொன்றை செய்யலாம். அதாவது குறிப்பிட்ட பிரதேச சபைகளின் தமிழ் மொழியும் ஆட்சிமொழியிருக்க வேண்டுமென ஜனாதிபதி பிரகடனம் செய்யலாம். மாகாணசபைகள் ஆட்சிமொழிகள், சட்டங்கள் ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்திலேயே ஆக்கப்பட்டது.

அவ்வாறான பிரகடனங்கள் செய்யப்படவில்லை. 17 வருடங்களாக நாட்டை ஆளும்போது இந்திய வம்சாவளி மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் தமிழ் மொழியில் அலுவல்களை செய்வதற்கு ஐ.தே.கட்சி நினைக்கவில்லை. தற்போதுதான் இந்தியவம்சாவளி மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் தமிழ் மொழியில் அலுவல்களை செய்ய முயற்சிப்பதாக ஐ.தே.கட்சியினர் காட்டுகின்றனர்.

ஐ.தே.கட்சி ஆட்சியிலிருந்த போது நாடற்றவர்களுக்கு பிரசாவுரிமை வழங்கியது போன்று சகல இந்தியவம்சாவளி மக்களுக்கும் எவ்வித வேறுபாடுமின்றி தேசிய அடையாள அட்டைகளை வழங்கியிருக்க முடியும். அடையாள அட்டை வழங்குவது பற்றி தனியாக ஆராயத் தேவை இல்லை.

தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பிரதேச சபைப்பிரிவுகளில் தமிழ் மொழியில் அலுவல்களை நடத்த மேற்கொள்ளப்பட வேண்டிய பிரகடனங்கள் பற்றியோ, தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் நடைமுறைகள் பற்றியோ ரணில் விக்கிரமசிங்ஹ அறியாதிருந்திருப்பார் என்று கூறமுடியாது.

அவர் ஐ.தே.கட்சி ஆட்சியின் போது எம்.பியாகவும் அமைச்சராகவும் பிரதமராகவும் இருந்திருக்கிறார். அவர் பிரதமராக இருந்த போதுதான் தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் லயங்களை சொந்தமாகக் கொடுப்பதாக சில பத்திரங்களை தொழிலாளர்களுக்கு அவர் கைப்படவே கொடுத்தார். அது ஒரு 'பம்மாத்து' என்பதை அவர் அறியாதவராக இருந்திருக்க முடியாது.




ஆனால் இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகளைப் பற்றி ஆராய ஐ.தே.கட்சி உபகுழுவொன்றை நியமித்துள்ளது. ஐ.தே.கட்சியின் தவிசாளரும் கொழும்பு மாநகர முதல்வருமான கரு.ஜயசூரிய மேற்படி உபகுழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.தே.கட்சியின் அரசியல் எழுச்சியே 1948ஆம் ஆண்டு பிரசாவுரிமை சட்டத்தைக் கொண்டு

எனவே ஆட்சியிலிருக்கும் போது செய்யத்தவறிய விடயங்களை எதிர்கட்சியிலிருக்கும் போது செய்வதாக வாக்குறுதி அளிப்பதும், எதிர்கட்சியிலிருக்கும் போது பிரச்சினைகளை ஆராயப் போவதாகக் கூறுவதும் மலையகமக்களை ஏமாற்றுவதற்கான புதிய பம்மாத்துக்களே ஆகும்.

# வடபகுதியில் மீனவரும் மிதிவண்டி வியாபாரிகளும் படும் அவலங்கள்

கடந்த காலங்களில் வடபகுதியில் வாழ்ந்து வரும் கடல் தொழிலாளர்கள் மீன் பிடித் தொழிலையே தங்களின் நிரந்தரத் தொழிலாகக் கொண்டு கடலில் சென்று மீன் பிடித்து அதன் மூலம் வட பகுதி மக்களின் மீது தேவைகளை மட்டுமல்ல கொழும்புக்கும் ஏற்றுமதி செய்து தங்களின் வாழ்க்கை வருமானத்தைப் பெற்று வந்தார்கள். தொடர்ந்து வந்த இராணுவ நடவடிக்கைகளினால் மீன்பிடி வளங்கள் பாதிக்கப்பட்டு உள்ளது. மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்க முடியாது தடை விதிக்கப்பட்டது. இதனால் இத் தொழிலையே வாழ்க்கைத் தொழிலாக நம்பி இருக்கும் பல்லாயிரம் மீனவக் குடும்பங்கள் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டன. தற்போது கரையில் இருந்து கிட்டிய தூரத்தில் சென்று மட்டும் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிடைக்கும் மீன் வட பகுதி மக்களின் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாது உள்ளது. ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதைத் தடுப்பதற்கு பல சாட்டுப் போக்குகளைச் சொல்லி இராணுவம் நிராகரித்து வருகின்றது. அதுமட்டும் இல்லாமல் பிடிக்கும் சிறுதொகை மீன்களை எடுத்து விற்பனை செய்யும் மிதிவண்டி வியாபாரிகள் கொண்டு சென்று விற்பதற்கும் பல்வேறு தடைகள் தற்போது இருந்து வருகின்றன.



அண்மையில் யாழ்.வல்லைச் சந்தி சோதனைச் சாவடியில் இருக்கும் இராணுவத்தினர் அன்றாடம் மீன் எடுத்து மிதிவண்டி வியாபாரம் செய்யும் வியாபாரிகளை தடுத்துள்ளார்கள். இதனால் ஆயிரத்துக்கு மேல்பட்ட மீன் வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனால் வியாபாரிகள் இராணுவத்தின்மேல் ஆத்திரம் கொண்டுள்ளார்கள்.

பருத்தித்துறை பொலிகண்டி திக்கம், வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் மீன் எடுக்கச் செல்லும் மிதிவண்டி பெட்டி வியாபாரிகள் பல சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். ஒரு நாளைக்கு கிராம சேவகரிடம் கடிதம் வாங்கிய பாஸ் வாங்கிய மறுநாள் பெரிய துரையிடம் பாஸ் வாங்கிவா என்று சாட்டுப் போக்குச் சொல்லி திருப்பி அனுப்புகின்றார்கள் இராணுவத்தினர். அது மட்டுமல்ல ஒரு சென்றியில் அடையாள அட்டை கேட்கிறார்கள். இன்னொரு சென்றியில் நிவாரண அட்டை கேட்கிறார்கள். இன்னொரு சென்றியில் குடும்பக் காட் கேட்கிறார்கள். ஒரு நாளுக்கு ஒரு ஆவணம் கேட்பதால் என்ன செய்வது என்று அல்லும் பகலும் கிராமசேவை அலுவலகத்திற்கும் பிரதேசம் செயலகங்களுக்கும் ஓடுகின்றார்கள். அங்கும் அவர்களுக்கு நல்ல பதில் கிடைக்காமையால் என்ன செய்வது என்று அறியாமல் உள்ளனர். தமிழில் எழுதிக் கொண்டு போனால் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் கடிதம் கொண்டுவரும்படி கேட்கிறார்கள்.

வாழ்நாள் பூராவும் இத்தொழிலையே நம்பி இருக்கும் இந்த மீனவ மக்களின் நிலைமை தொடர்கின்றது. மீன் எடுத்து சைக்கிளில் விற்பனை செய்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அன்றாடம் குடும்ப சீவியம் செய்வதற்கே கஸ்ரப்படுகின்றனர். இதை விட்டால் வேறு தொழில் இல்லாத சிறு மீன் வியாபாரிகள் சோகம் ததும்பிய நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. அதுமட்டுமல்லாமல் தினமும் காலையில் மீனுக்குச் செல்லும் இவ் மிதிவண்டி மீன் வியாபாரிகள் வல்லை சோதனைச் சாவடிக்குச் செல்லும் போது இன்று போக முடியாது என்று கூறியதும் திரும்பி வருகின்றனர். இது பலன் தராத பட்சத்தில் நீண்ட தூரத்தில் உள்ள சாவகச்சேரி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கும் சென்று மீன் எடுக்க அலைகின்றனர். இதனால் நட்டப்பட்டு மனநிலை கூட சில வியாபாரிகளிடம் பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

இது தனித்தனியாக இராணுவத்திடம் கெஞ்சி நின்று, முயற்சி செய்து எதையும் பெற முடியாது. இதற்கு மாற்றுத் திட்டம் ஒன்றை மிதிவண்டி மீன் வியாபாரிகள் வடபகுதியில் கொண்டு வர வேண்டும். மீன் வியாபாரிகள் அமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் மூலம் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அன்றாடப் பிரச்சினைகளை அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் எடுத்துக்காட்டுவதன் மூலம் தங்களுக்கு இளைக்கப்பட்டு வரும் இராணுவத்தின் அநீதிகளை அகற்றிவிட முடியும். அமைப்பு ஒன்றை அமைத்து அதன் மூலமாக தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்வது சுலபமாக இருக்கும். அத்துடன் நல்ல பலனையும் பெற முடியும்.

ஆகையால் தங்களின் தற்போதைய துன்பங்கள் பாதிப்புக்கள் அவல நிலைகளை உணர்ந்து உடனடித் தேவையாக மிதிவண்டி மீன் வியாபாரிகள் தமக்கான அமைப்பு ஒன்றை உருவாக்குவது அவசியமாகும்.

# இலங்கைக்குள் ஊடுருவும் கொங்கொங் விஷக் கிருமிகள்

கொங் கொங் சீனாவின் ஒரு பகுதியாகிறது. அதன் சட்டம் ஒழுங்கு சமூக வாழ்க்கை என்பன தனித்துவமாகப் பேணப்படுவதற்கு சீனா உறுதியளித்துள்ள போதிலும் சமூகச் சீரழிவுகளுக்கான முறையற்ற தொழில்கள் பல அங்கு நிச்சயம் தடைகளுக்கு உள்ளாகப் போகின்றன. இதில் முக்கியமானது கஸினோ சூதாட்ட மையங்களும் அவற்றுடன் கூடிய விபச்சாரமுமாகும். இது போன்று வேறும் பல அங்கு தடைசெய்யப்படலாம் என்று அச்சம் காரணமாக அத்தொழில்களில் ஈடுபட்ட சில லட்சாதிபதிகள் கொங் கொங்கை விட்டு வெளியேறி வருகிறார்கள். இவர்கள் லட்சம் லட்சமாகச் சம்பாதித்த அத்தொழில்களைத் தொடர்ந்தும் நடாத்துவதற்கு உரிய நாடுகளைத் தேர்ந்தெடுத்தும் உள்ளனர். இதில் ஒரு நாடே நமது இலங்கை மணித்திருநாடாகும். மும்மணிகளின் ஆசீர்வாதத்துடன் வழி நடாத்தப்படும் இந்நாட்டிற்குள் இந்த கொங்கொங் லட்சாதிபதிகளை வரவேற்கும் முயற்சிகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டதாக அறிய முடிகிறது. கொங்கொங் இலங்கைக்கான போக்குவரத்து விசா தேவையற்றது ஏற்கனவே முடிவாகிய ஒன்று. அண்மையில் 25 ஆயிரம் அமெரிக்க டொலர் செலுத்தினால் இலங்கைப் பிரசாவுரிமை பெறமுடியும் என்ற முடிவு அத்துடன் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவால் மூடப்பட்ட கஸினோ சூதாட்டக் குகைகள் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் மீண்டும் இயங்க அனுமதிக்கப்பட்டமை, இத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டே கொங் கொங் லட்சாதிபதிகள் இலங்கைக்குள் படையெடுத்துள்ளார்கள். இவர்களது முக்கிய தொழில்கள் முறையற்றவை என்பது யாவரும் அறிந்தவையாகும். கஸினோ சூதாட்டம், மதுபான நிலையங்கள், பொழுது போக்க களியாட்ட நிலையங்கள், அவற்றுக்கூடாகவே விபச்சார விடுதிகள், விளையாட்டு கிளப்புகள், உணவுச் சாலைகள் என்பன போன்ற பல்வேறு வடிவங்களில் இச்சமூகச் சீரழிவு மையங்கள் மேன்மேலும் விரிவடையப் போகின்றன.

ஏற்கனவே தொழிலாளர்களைப் பிழிந்தெடுக்கும் பல்தேசியக் கம்பனிகள் தமது கரண்டலை இறுக்கி வருகின்றன. மறுபுறத்தில் சமூகச் சீரழிவுகளைப் பரப்பி நமது நாட்டின் கலாச்சார வாழ்வை மேற்குமயப்படுத்தும் போக்குகள் மேன்மேலும் வளர்க்கப்படுவதற்கு தற்போது கொங்கொங் லட்சாதிபதிகள் வரவேற்கப்படுகின்றனர். இவர்கள் பணத்தைக் கொட்டித் தொழில்களை நடத்தலாம். ஆனால் அவை விஷக்கிருமிகளையே பரப்பப் போகின்றன. இத்தகைய சீரழிவுகளுக்கு மக்கள் எவ்வாறு பதில் அளிக்கப் போகின்றனர் என்பதே கேள்வியாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



## கண்ணோட்டம்

# பெரியாரியம்



வரலாறு பொதுவாகவே முற்போக்கான திசையில் தான் போகின்றது. ஆனாலும் அதன் ஒவ்வொரு நகர்வும் முற்போக்கான திசையில் அமைவதில்லை. அடுக்கடுக்கான முன்னேற்றங்களைப் பின்னிடைவுகள் தொடர்கின்றன, எழுச்சி வீழ்ச்சி மீண்டும் எழுச்சி என்ற விதமாகவே முற்போக்குச் சிந்தனையாளன் வரலாற்றைக் காண்கின்றான். தடுமாறும் புத்தியுள்ளவன் ஒவ்வொரு வீழ்ச்சியின் பின்பும் எல்லாமே முடிந்து விட்டது என்று சோர்ந்து விடுகின்றான். அவனுக்கு அவன் வந்த பாதையும் மேற்கொண்ட பயணமும் பற்றிய நம்பிக்கை தளர்கிறது. எனவே அவசரம் அவசரமாகவே ஏதாவது மாற்று வழி உண்டா என்று தேடித் தப்பித்து ஓட முயற்சி செய்கிறான். உறுதியான சிந்தனையுள்ளவனோ தற்காலிகமான வீழ்ச்சியின் காலத்தில் தனது கடந்த காலச் சரி பிழைகளை எல்லாம் மதிப்பிட்டு புத்துணர்வுடன் எதிர்காலத்திற்கான போராட்ட எண்ணங்களுடன் செயலில் இறங்குகிறான்.

இந்திய அரசியலில் இந்தியாவின் **இந்து, இந்தி** தேசியமும் அதன் பல்வேறு மொழிவாரி இனவாரியான தேசியங்களும், சாதியமும் சாதிவாரியான அரசியலும் ஏற்படுத்திய தாக்கம் பெரியது தான். இவற்றுக்கு முகம் கொடுப்பது எளிதல்ல. அரச நிறுவனத்தைச் சீர்திருத்தி அதன் மூலம் சமுதாயத்தைச் சமதருமப் பாதையில் கொண்டு செல்லலாம் என்ற நம்பிக்கையின் விளைவாக இந்தியாவின் 'சோஷலிஸ்டு கட்சிகளும் மட்டுமல்லாமல் பிரதான 'கம்யூனிஸ்டு' கட்சிகளும் வழிதவறி விட்டன. மாக்ஸிஸ - லெனினிஸ சிந்தனையை முன்னெடுத்துச் சென்ற புரட்சிகர இயக்கங்களும் இடது தீவிரவாதத்தின் காரணமாக தம்மைத் தனிமைப்படுத்தி பலவீனமாகின. குருஷேவ் யுகத்தில் தொடங்கிய சீரழிவு தான் சோவியத் யூனியனுடைய அண்மைக் காலச் சிதைவுக்கே காரணம் என்பதை மறந்து சோவியத் யூனியனின் அழிவை மாக்ஸியத்தின் முடிவாகக் காணுகிற போக்குக்குப் பலியானவர்கள் பலர் இந்தக் குழப்பத்தின் மத்தியில் 'சுண்ணாம்பில் இருக்கிறது சூட்சுமம்' என்ற விதமாகப் புதிய மந்திரங்களும் சூத்திரங்களும் தமிழ் நாட்டில் ஏராளமாகவே விளைகின்றன. இவை எல்லாமே மக்களைத் திசை திருப்புவதில் வெற்றி பெறப்போவதில்லை. ஆயினும் இவற்றை வைத்துப் பிழைப்பு நடத்துவோரை அடையாளங்காட்ட வும் இவ்விதமான குழறுபடிகள் ஏன் சாத்தியமாகின்றன என்று அறியவும் இவை பற்றிய ஆய்வுகள் அவசியம். எனவே பெரியாரியம் (ஈ.வெ.ராமசாமி கொள்கைகள்) பெண்ணியம், தலித்தியம், அமைப்பியல் போன்ற பேர்களில் புதிய முற்போக்குச் சிந்தனை என்ற பாவனையுடன் வரும் சிந்தனைப் போக்குகள் பற்றிய சிறு கட்டுரைகள் இத் தொடரில் எழுதப்படும். கடந்த சில ஆண்டுகளாக படிப்படியாக கட்டியெழுப்பப் பட்டுள்ள பெரியாரியம் பற்றி முதலில் இங்கு கவனிப்போம்.

## பெரியாரியம்

'திராவிட' தேசியவாதக் கோட்பாடாகத் தொடங்கி நடைமுறையில் தமிழ்த்தேசிய வாதமாக உள்ள அரசியல் தமிழ்நாட்டின் திராவிட அரசியற்கட்சிகளின் 'கொள்கைகளின்' அடிப்படை. திராவிடர் கழகத்தில் இருந்து உருவான சகல அமைப்புக்களுக்கும் பெரியாரே பேரளவில் என்றாலும் பிதாமகர். தி.க. பிளவுபட்டு தி.மு.க. உண்டான போது பெரியாரின் கொள்கைகளை தாம் நடைமுறைப்படுத்துவதாக அவரிடமிருந்து பிரிந்து போன அண்ணாவும் தம்பிமாரும் சொன்னார்கள். பின்னர் ஏற்பட்ட எந்தப் பிளவிலும் பெரியாரை நிராகரிக்க எவராலும் முடியாத அளவுக்கு அவருடைய செல்வாக்கு மிகவும் பெரியது. ஆனாலும் திமுக, அதிமுக ஊழல் ஆட்சிகள் தமிழகத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மேற்கொண்ட நடவடிக்கைகள் பலவும் பெரியார் என்றைக்குமே ஏற்க மாட்டாதவை தான். எப்படியானாலும் பெரியாரின் பேரில் குறுகிய தமிழ் தேசியவாத அரசியல் வேரூன்றுவதில் பெரியாரின் பங்கை நாம் மறுக்க முடியாது. பெரியாரின் பகுத்தறிவு வாதமும் பார்ப்பனிய விரோதமும் அவரது கடைசி காலம் வரை அவரோடு ஒட்டி இருந்தன என்று சொல்லலாம். திராவிட நாடு கொள்கையை முன்வைத்த பெரியார் 1950 அளவிலேயே 'திராவிட நாடாவது வெங்காயமாவது' என்று கைகழுவி விட்டார். தமிழ் நாட்டின் பிரிவினை பற்றியும் அவர் அதிகம் அக்கறை காட்டவில்லை. ஆயினும் தமிழ் நாட்டில் பார்ப்பனரல்லாத தமிழர் ஆட்சி பற்றிய அவரது ஆர்வம் அவருக்கு எப்போதுமே இருந்தது. அவரது பகுத்தறிவுவாதமும் இந்தப் பார்ப்பனிய விரோதத்துடன் நெருக்கமான தொடர்புடையதுதான். இதனால் அவரை வெறுமனே ஒரு பார்ப்பன விரோத சமூக சீர்திருத்தக்காரர் என்று ஒதுக்கி விட முடியாது. அவர் வாழ்ந்த காலத்துத் தமிழ்நாட்டு (சென்னை மாகாண) அரசியலின் அடிப்படையில் அவரது கருத்துக்களையும் நடவடிக்கைகளையும் மதிப்பிடுவது நியாயமானது. அதைவிட முக்கியமாக இன்றைய தமிழகத்து சட்டமன்ற அரசியலில் உள்ளவர்களுடன் ஒப்பிடும்போது பெரியார் இவர்களை விட பல வகைகளிலும் ஓங்கி நிற்கின்றார் என்பதையும் மறுக்க முடியாது.

பெண்ணுரிமை, சாதி ஒழிப்பு, மூட நம்பிக்கை ஒழிப்பு போன்ற விஷயங்களில் அவர் மிகவும் உறுதியாகவே நின்றார். 1930 களின் முற்பகுதியில் கம்யூனிஸ்ட்டுகளுடன் ஏற்பட்ட தொடர்புகளின் விளைவாக அவர் பொதுவுடமைக் கருத்துக்களையும் வலியுறுத்தினார். ஆயினும் இவை ஒவ்வொன்றிலும் அவரது பங்களிப்பு அவரது ஆற்றலுக்கு ஏற்ற அளவில் அமையத் தவறிவிட்டது.

பெரியாரின் அரசியலில் ஏற்பட்ட தவறுகளையும் அவரது தலைமையிலான சுயமரியாதை இயக்கத்தினதும் (பின்னர் திராவிடர் கழகத்தினதும்) தவறுகளையும் பெரியார் என அறியப்பட்ட ஒரு தனிமனிதரின் தவறுகளாகக் காண்பதும் ஒரு தனிமனிதர் பற்றிய விவாதமாகச் சுருக்குவதும் விவாதத்தைப் பயனற்ற திசைகளிலேயே திருப்ப உதவும். ஆயினும் தமிழ் நாட்டில் இன்று உருவாக்கப்படும் பெரியாரியக் கோட்பாடும் அதன் தனிநபர் வழிபாடும் இதை ஊக்குவிக்கின்றன. பெரியாரின் பங்களிப்பை முற்றாகவே நிராகரிக்க முனையும் பார்ப்பனியப் பிற்போக்கு வாதிகட்கும் இது வசதியாகவே உள்ளது. முற்போக்குச் சிந்தனையாளர்கள் இதினின்றும் விலகி நிற்பது நல்லது.

பெரியாரின் சிந்தனையில் முக்கியமான ஆதிக்கம் செலுத்துவது பார்ப்பனிய எதிர்ப்பு. பல சமயங்களில் பார்ப்பனியத்துக்கும் பார்ப்பனர்களுக்கும் அவர் வேறுபாடு காட்டத் தவறுகிறார். அவர் சமுதாயத்தில் இருந்து பல முரண்பாடுகளை அடையாளங் கண்டாலும் சாதிய முரண்பாட்டின் ஒரு முக்கியமான அம்சமான பிராமண ஆதிக்கத்தையே அடிப்படைப் பிரச்சினையாகக் கொள்கிறார். எனவே சாதியத்தில் பிராமணருக்கும் பிராமணரல்லாதாருக்குமிடையிலான முரண்பாடே, முதன்மையானதும் முக்கியமானதுமாக காணப்படுகின்றது. இதை விளங்கிக் கொண்டால் அவரது பிற நடவடிக்கைகளை விளங்கிக் கொள்வதில் அதிகம் சிரமம் இராது.

பிராமணர்களே அவரது பிரதான எதிரிகளாகி விட்ட பின்பு இந்தியத் துணைக் கண்டத்தையே ஆளுகிற பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இரண்டாம் பட்சமானவர்களாகிறார்கள். ஆகவே பார்ப்பனியத்தை ஒழித்துக்கட்டும் வரை வெள்ளையர் ஆட்சி தொடரலாம் என்ற நிலைப்பாடு சாத்தியமாகிறது. கட்சி அரசியலை விட சமூகச் சீர்திருத்தத்தையே பெரியார் முதன்மைப் படுத்தியதற்குப் பலவிதமான நியாயங்கள் கூறப்பட்டாலும், தான் முதன்மைப்படுத்திய பார்ப்பனிய விரோத அரசியலைச் செயற்படுத்த நீதிக்கட்சியை அன்று பயன்படுத்திய பெரியார், பின்பு வேறு கட்சிகளை ஆதரிக்க முன்வந்த விதம் அவரது அணுகுமுறையின் அக முரண்பாட்டின் அடையாளமே தான்.

அரசியலை விடச் சமூகச் சீர்திருத்தமே முக்கியம் என்ற பெரியாரின் வாதம் பிரித்தானிய ஆட்சியாளர்களின் கெடுபிடிகளின் விளைவாக இடதுசாரி அரசியற் கருத்துக்களைப் பேசுவதைத் தவிர்ப்பதற்கும் வசதியாயிற்று. சுயமரியாதை இயக்கத்தைக் காப்பதற்காகச் சில கொள்கைகளைக் கைவிடுவது என்ற பெரியாரின் முன் மாதிரியைப் பின்பற்றியே அண்ணாதுரை 1962 ல் திராவிட நாடு கோரிக்கையைக் கைகழுவி தி.மு.க.கழகத்தை காப்பாற்றினார். பார்ப்பனிய விரோதத்தையே பிரதானப்படுத்திய தன் விளைவாகத் தாய்மொழி கல்வி பற்றியும் பெரியார் பெரிய தவறுகளைச் செய்ய நேர்ந்தது. தமிழ் மொழிக்கும் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் இந்தியை விடவும் சமஸ்கிருதத்தை விடவும் ஆங்கிலமே பெரியகேடு செய்யக் கூடும் என்பதை அவர் உணரத் தவறியதும் இந்தப் பார்ப்பனிய விரோதத்தாலேதான். தாழ்த்தப்பட்ட மக்கள் ஆங்கிலத்திலேயே வீட்டில் பேச வேண்டும் என்று சொல்கிற அளவுக்கு அவரது தீவிர நிலைப்பாடு அவரைத் தள்ளியது.

மதம் பற்றி பெரியாரின் நிலைப்பாட்டை மாஓவுடைய நிலைப்பாட்டுடன் ஒப்பிட்டால், பெரியார் பிள்ளையார் சிலை உடைப்பில் இறங்கியதையும் காலணிகளுடன் திபெத்திய புத்த கோயில்கட்குள் போக வேண்டாம் என்று சீன மக்கள் விடுதலைப் படையினரிடம் மாஓ அறிவுறுத்தியதையும் விளங்கிக் கொள்ளலாம். மதமும் மூட நம்பிக்கைகளும் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்கான அடிப்படைக் காரணங்களின் மீது கை வைப்பது மாக்ஸிய - லெனினிஸ அணுகுமுறை. அந்தக் காரணங்களை விடுத்து சமூகத்தின் பெரும் நோயின் அறிகுறிகளைத் தாக்குவதில் பல பகுத்தறிவு வாதிகள் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படுவது மட்டுமில்லாமல் அவர்களுடைய நல்ல கருத்துக்களும் மக்களின் பகையை சம்பாதிக்கின்றன.

சாதியத்துக்கு எதிராகக் குரல் கொடுத்த பெரியாரால் ஏன் தாழ்த்தப்பட்ட மக்களை அணிதிரட்ட முடியவில்லை என்பதும் நமது கவனத்துக்குரியது. பார்ப்பனிய எதிர்ப்பு மட்டுமே முக்கியமானதாக இருந்ததால் தாழ்ப்பட்ட மக்களது நலன்களைப் பிரதிபலிக்கிற பிற மேல்சாதி, மேல்தட்டு, அரசியல் வாதிகள் பெரியாருக்கு நேச சக்திகளாகவே தெரிந்தனர். அவர்களது தவறுகளின் விளைவாக காங்கிரஸ் கட்சியும் அதில் ஆதிக்கம் செலுத்திய பிராமணர்களும் பிறமேட்டுக் குடிகளும் தாழ்த்தப்பட்ட சாதியினரின் பெரும்பகுதியின் தலைமையைக் கைப்பற்றி நீண்டகாலமாகத் தமது கையில் வைத்திருக்க முடிந்தது. கம்யூனிஸ்ட்டுக் கட்சியுடன் என்ன முரண்பாடு இருந்தாலும் தாழ்த்தப்பட்ட சாதியினரான கூலி விவசாயிகள் போன்றோரை ஒரு வலிய அரசியல் சக்தியாக வளர்த்தெடுப்பதற்கான பார்வை பெரியாரிடம் இல்லை என்றால் அது அவருக்கு அந்த மக்கள் மீதான அக்கறை இல்லாததால் அல்ல: முழுத்திராவிடர் இயக்கமும் பார்ப்பன. எதிர்ப்பு என்ற வேலிக்குள் தன்னைச் சிறைப்படுத்திக் கொண்டதும் தமிழ்த் தேசியவாதத்தை வைத்தே அரசியல் நடத்த நேர்ந்ததும் ஏன்? ஒரு முரண்பாடு எவ்வளவு முக்கியமானதாகத் தெரிந்தாலும் இரண்டாம் பட்சமான முரண்பாட்டை அடிப்படையான பிரதான முரண்பாடாகக் காண்பது, அபாயகரமானது. இதுவே பெரியாருக்கு நடந்தது. திராவிட இயக்கங்கள் அதன் அறுவடை.

பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் சரிவின் பின் அவரது அரசியலில் உள் முரண்பாடுகள் அதிகமாகவே இருந்தன. இவற்றுக்கு எல்லாம் 'விஞ்ஞான ரீதியான' விளக்கங்கள் தர வல்லவர்கள் இருக்கிறார்கள். அவரது பிற்காலத் தவறுகளால் அவரது சமூக அரசியல் பங்களிப்பின் முக்கியத்துவத்தை நாம் நிராகரிக்கக் கூடாது.

ஆயினும் பெரியாரியம் என்ற ஒரு கோட்பாட்டை உருவாக்கி அதை ஒரு முழுமையான முற்போக்கு சமூக அரசியற் சிந்தனையாகவும் மாக்ஸியர்கள் நிபந்தனையின்றி ஏற்க வேண்டிய ஒரு தத்துவமாகவும் சிலர் செய்யும் முயற்சிகள் பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பெரியார் அண்மைக் காலத் தமிழகத்தின் அதியுயர்ந்த சிந்தனையாளர் என்று கருதுகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களது கருத்தில் ஓரளவு நியாயமும் உள்ளது.' அது அப்படியே உண்மையானால் தமிழகத்தினது நிலைபற்றி வருத்துவதற்கும் நிறைய உள்ளது.

**இ.தி.கோணாமலை**

**புதியபூமி - சந்தா விபரம்**

ஒரு வருடம் ரூபா 150/=

ஆறு மாதம் ரூபா 75/=  தனிப் பிரதி 10/=

வெளிநாடுகளில் ஒரு வருடம் 25 அமெ.டோலர்

(தபால் செலவு உட்பட)

அனுப்ப வேண்டிய முகவரி

இ.தம்பையா,

S-47, 3வது மாடி,

கோழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட்

கொழும்பு - 11, இலங்கை

நன்றி - நூலகத்திட்டம்



# இவரைக் கண்டு பிடியுங்கள்!

யாழ்ப்பாணத்தில் அதி உயர் அரசாங்க அதிகாரி அவர். அவரது ஊரும் அவரது செயலகத்திற்கு அருகில் தான். ரிவிரச ராணுவ நடவடிக்கைக்கு முன்பும் பின்பும் அவரே உயர் அதிகாரி. ஆனால், அவர்மீது ஏகப்பட்ட புகார்கள். ஊழல் என்றும் அதிகார துஷ்பிரயோகம் என்றும் பல மட்டங்களில் பேசப்பட்டு வந்தது. 1996 ஏப்ரிலில் வலிகாமம் யாழ்ப்பாணத்திற்கு மக்கள் மீளக் குடியமர்விற்குச் சென்ற பின்பும் அவர் மீது குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதிலும் அவற்றை விநியோகிப்பதிலும் பல முறைகேடுகள் ஊழல்கள் என்று செயலக மட்டத்தில் இருந்தும் மக்கள் மட்டங்களில் இருந்தும் பகிரங்கமாகப் பேசப்பட்டன. கொழும்பில் இருந்து வெளிவரும் அரசு சார்பு பத்திரிகைகளில் அந்த உயர் அதிகாரியைச் சுட்டிக்காட்டி அவரது முறைகேடுகளைப் பட்டியல் இட்டுக் காட்டின. பல பக்கத் தாக்கங்களால் அவரது பதவிக்கு மாற்றமும் கொழும்பில் இருந்து கிடைத்தது. அதனையும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. ஆனால் அதிகாரி மசியவில்லை.

நேரே கொழும்பு வந்து அரசின் உயர் மட்டத்துடன் மிக நெருக்கமான தமிழ்க் கட்சிப் பிரமுகர் ஒருவரைப் பிடித்து மாற்றத்தை வாபஸ் பெற்றுக் கொண்டு ராஜநடை போட்டு யாழ்ப்பாணம் திரும்பினார். அதன் பின் அவரை யாரும் எதுவும் செய்து விட முடியாது என்ற தோரணையில் பேசியும் நடந்தும் வந்தார். அது போதாதென்று தனக்கு ஒரு சேவை நலம் பாராட்டு விழாவையும் யாழ்ப்பாணத்தில் நடத்துவித்தார். யாழ்ப்பாணத்தில் பாராட்டுக்கள், விளம்பரங்கள், வாழ்த்துக்கள் தடல்புடலாகவும் வெளிவந்தன. அவரது பதவிகள், சேவைகள், தியாகங்கள் என அடுக்கிக் கூட்டப்பட்டன. அவரது பதவியைப் பாதுகாத்து தக்கவைத்துக் கொள்வதற்காகவும் மேற்படி விழாக்கள் எடுக்கப்பட்டது என்றே யாழ்ப்பாண மக்கள் பேசிக்கொள்கின்றனர். இவர் தான் அண்மையில் தனது பேச்சு ஒன்றில் கொழும்பில் இருப்பவர்கள் யாழ்ப்பாணத்தைப் பற்றிப் பேசக் கூடாது என்றும் கூறி பலரது கவனத்தை ஈர்த்தவர்.

ஆனால் இன்று அதே உயர் அதிகாரி யாழ்ப்பாணத்தில் அவர் வகித்து வந்த உயர் பதவியில் இருந்து அகற்றப்பட்டுள்ளார். அவருக்கு அடுத்த நிலையில் இருந்து வந்தவர் அவரது இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். பதவி இழந்தவர் உடனடியாக விமானம் மூலம் கொழும்புக்கு பறந்து வந்துள்ளார். அவருக்கு அவரது பாதுகாவலர்கள் மூலம் மாற்றம் கிடைக்குமோ அல்லது பதவி உயர்வும் கிடைக்கலாம், அல்லது விசாரணைக்கும் உள்ளாகலாம் என்று உயர் மட்டத்தில் பேசிக் கொள்ளப்படுகிறது.

## சட்டத்தின் முன் நிறுத்தினால் ...

( 7ம் பக்கத் தொடர்ச்சி)

அதுவும் சட்டத்தின் முன் நிறுத்தியுள்ளதாகக் கூறப்படும் பிரகாரங்களின் மத்தியில், அடுத்த பாலியல் வல்லுறவுக்கும் படுகொலைக்கும் எத்தனை பெண்களைப் பாதுகாப்புப் படையினர் வடக்கு கிழக்கில் குறி வைத்திருக்கின்றனரோ யார் அறிவார் பராபரமே.

கோணேஸ்வரி விடயத்தில் காலம் தாழ்த்தியாவது விசாரணைக்கு உத்தரவிட்டமை வரவேற்கத்தக்கது. ஆனால் விசாரணை மட்டும் அல்லது தண்டனை மட்டும் போதாதவை. இனியேனும் இவ்வாறு இடம் பெறாது என்ற உத்தரவாதத்தை ஜனாதிபதியோ அன்றி வேறு எவருமோ கொடுக்க முடியாது. யுத்தம் நீடிக்கும் வரை பாதுகாப்புப் படையினரின் கைகளில் சட்டங்களும், வரையறையற்ற அதிகாரங்களும் இருக்கும் வரை இதுபோன்ற பாலியல் வல்லுறவுகளும் படுகொலைகளும் பெண்கள் மீது தொடரப்படும் அபாயம் இருந்து வரவே செய்யும். புதிய பூமியின் கடந்த இதழில் சுட்டிக் காட்டியது போன்று பரந்த மக்கள் எழுச்சி அலை ஒன்று தோற்றுவிக்கப்பட்டு முன்னெடுக்கப்படுவதன் மூலமே பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகளுக்கும் படுகொலைகளுக்கும் முடிவு ஏற்படும்.

## விதியே விதியே ...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ள்ளார். அவர் நன்கு புரிந்துள்ள விடயம் இவர்கள் ஒருபோதும் ஒற்றுமை காணமாட்டார் என்பதுதான். தமிழ்த் தேசிய இனம் மலையகத் தமிழ் தேசிய இனம் முஸ்லிம் தேசிய இனம் ஆகிய மூன்றும் இன்று இன ஒடுக்குமுறைக்குள்ளாகியிருக்கின்றன. எனவே ஒடுக்கப்படும் இவ்வினங்களின் ஒன்றுபட்ட குரல் ஓங்கி ஒலிக்க வேண்டிய நேரத்தில் அவ்வாறன்றிப் பிரிந்து பிளவுபட்டு ஒன்றையொன்று அழித்து வருவது தமிழ் இனத்தைப் பொறுத்தவரை வேதனை மேல் வேதனையானது.

இத்தனை அழிவுகள் அனர்த்தங்களுக்கும் பின்பும் ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆள நினைப்பதில் என்ன பிழை? என்ற கோணத்தில் நின்றே சில தமிழ்த் தலைமைகள் எனப்படுபவை சிந்திக்கின்றன. இன்று யாவுமே மறு மதிப்பீட்டிற்கும் மாற்றியமைப்பிற்கும் உள்ளாகி வரும் ஒரு காலகட்டத்தில் நாம் உட்பட உலகம் 21ம் நூற்றாண்டிற்குள் புதியனவற்றைத் தேடிப் புகுந்து கொள்ள இருக்கும் சந்தர்ப்பத்தில் நாம் சொல்வது தான் சரி. நம் பாட்டன் முப்பாட்டன் செய்தவற்றைத் தான் நாமும் செய்வோம் என முரண்டு பிடிப்பது ஏனோ தெரியவில்லை. அன்று பொன்னம்பலமு செல்வநாயகமும் எதிர்வாதம் புரிந்து எதைச் சாதித்தார்கள் என்பது இளம் தலைமுறையினர் படிக்க உதவலாம். ஆனால் இன்று தேவைப்படுவது தேசிய இன ஒடுக்குமுறையில் இருந்து விடுபடுவதற்கான சரியான மார்க்கமும் அதற்கான ஒன்றுபட்ட செயல் முறையுமேயாகும். அதற்கான உணர்வும் உத்வேகமும் உடைய நேர்மையான அரசியல் சக்திகள் சகல தரப்பில் இருந்தும் முன்னுக்கு வருவது இன்றைய தேவையாகும்.

(8ம் பக்கத் தொடர்ச்சி ...)

# பொல்பொட்டுடன் போய் விடுமோ?

தெற்கில் தோல்வியை எதிர்நோக்கிய, அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகள், தென் வியற்நாமின் கிராமங்களையும் காடுகளையும் பெருந்தொகையான மக்களையும் அழித்தொழித்தனர். ஆயினும் விடுதலைப் போரை முறியடிக்க முடியவில்லை. எனவே காம்போஜத்தில் லொநொல் என்ற தமது எடுபிடியின் மூலம் 1970 ல் ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தினர். அதுவரை நாட்டின் பிரதமராக இருந்த இளவரசர் சிஹானுக்கிற்கு உதவி செய்ய சோவியத் யூனியனும் தயங்கியது. அவர், பெல்ஜிங்கில் தங்கியிருந்து, நாட்டின் விடுதலைக்குப் போராடும் இயக்கத்திற்குத் தலைமை தாங்குமாறு மாவோ சேதுங் மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையினரால் ஊக்குவிக்கப்பட்டார். ஐந்து வருடகாலமாக நடந்த போராட்டத்தின் முடிவில் காம்போஜத்தினுள் நுழைந்த அமெரிக்கப் படைகளும் அமெரிக்க எடுபிடிகளும் விரட்டியடிக்கப்பட்டனர். சில வாரங்கட்குள் தென் வியற்னாமிலும் அமெரிக்கப் படைகள் தோல்வியைத் தழுவின. கம்போஜத்தில் அரச அதிகாரம் செங் க்மெர்களிடம் போயிற்று.

யுத்தத்தின் விளைவாகக் காம்போஜம் ஒரு பெரிய நெருக்கடியை எதிர் நோக்கியது. நாட்டின் சனத்தொகையின் பாதியினர் தலைநகரமான நொம்பென்னில் குவிந்து விட்டனர். அமெரிக்க இறக்குமதிகள் மூலம் உணவும் அத்தியாவசிய தேவைகளும் கிடைக்கப் பெற்றுவந்த தலைநகரம் விரைவில் உணவுத் தட்டுப்பாட்டால் புதிய உள்நாட்டுக் கலவரத்துக்கு முகம் கொடுக்க நேரிடும் அபாயம் ஏற்பட்டது. இதைத் தவிர்க்கும் முகமாக தலைநகரத்திலிருந்து அனைவரையும் கிராமங்கட்கு அனுப்பும் கொள்கையைப் புதிய அரசாங்கம் மேற்கொண்டது. இக் கொள்கையைக் கையாள்வதில் ஏற்பட்ட தவறுகள் பல. மக்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகளாகக் கருத வேண்டிய வேறுபாடுகள் எதிரியுடனான முரண்பாடாகக் காணப்பட்டதன் விளைவாக செங் க்மெர் ஆட்சி தனது நேச சக்திகளுடனும் பகைமையைத் தேடிக் கொண்டது. சில இடங்களில் அனுபவமற்ற இளைஞர்களில் நிதானமற்ற அணுகுமுறையின் விளைவாக அளவு மீறிய கடுந் தண்டனைகளும் விதிக்கப்பட்டன. 1975 முதல் 1979 வரையிலான காலத்தில் இறந்தோரின் தொகை 10 லட்சம் அளவென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது உண்மையாக இருந்தால் கூட நேரடியான வன்முறையால் இறந்தோர் தொகை இதில் ஒரு சிறு பின்னமே. பெரும்பாலோர் உணவுப் பற்றாக் குறையாலும் நோயாலுமே இறந்தனர். இதற்கான பழியிற் பெரும்பகுதி காம்போஜத்தின் விவசாயத்தை முற்றாகவே சீரழிவுக்குத் தள்ளிய அமெரிக்க ஆக்கிரமிப்பையே சாரும். இதை மூடி மறைக்கவே எல்லா மரணங்கட்கும் பொல்பொட் மீது பழிசுமத்தப்படுகிறது.

ஹோ சி மின்னுடைய மரணத்தையடுத்து வியற்நாமில் அதிகாரத்தைக் கைப்பற்றிய லே துவான் தலைமை சோவியத் மேலாதிக்கத் தூண்டுதலால் சீனாவுடன் பகைமையான போக்கை மேற்கொண்டது. அதே வேளை, காம்போஜத்திலும் லாவோஸிலும் வியற்நாம் ஆதிக்கம் செலுத்தி ஒரு பிராந்திய வல்லரசாக மாறும் எண்ணமும் சோவியத் மேலாதிக்கவாதிகளால் ஊக்குவிக்கப்பட்டது. இதன் விளைவாக காம்போஜத்துடன் எல்லைப் போர் ஒன்றில் வியற்நாம் ஈடுபட்டது. இதன் தொடர்ச்சியாகவே உட்பூசல்களால் பலவீனப்பட்ட செங்க்மெர் ஆட்சியை வீழ்த்தித் தன் பொம்மை ஆட்சியை நிறுவியது. இந்த ஆட்சி முற்றிலும் வியற்நாமிய படைபலத்தின் ஆதரவையே நம்பியிருந்தது. ஏறத்தாழப் பன்னிரண்டு வருட காலமாக வியற்நாமிய ஆக்கிரமிப்புப் படைகட்கு எதிரான போர் நடந்தது. முடிவில் வியற்நாமுக்கும் மேலை நாடுகட்கும் உடன்பாடான ஒரு ஆட்சி உருவாக்கப்பட்டது.

வியற்நாம் ஆக்கிரமிப்புக்கெதிரான போரில் செங்க்மெர்களுக்கும் சிஹானுக்கின் இளவரசரது கட்சிக்கும் சீனாவின் ஆதரவு முன்பு போலவே தொடர்ந்தது. அதேவேளை, வியற்நாம் மீதான பகைமையால் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது எதிரியாகப் பிரகடனம் செய்த க்மெர் ரூஷுக்கு வியற்நாமுக்கு எதிரான போரின் முடிவு வரை ஆதரவளித்ததையும் இங்கு நினைவு கூர வேண்டும். காம்போஜத்தில் தங்களுக்கு உடன்பாடான ஆட்சி வந்தபின்பு திடீரென்று பொல்பொட் அவர்களது கண்களில் கொலைகாரனாகவும் பயங்கரவாதியாகவும் உருமாறி விட்டார். இன்றைய பிரதமர்களில் ஒருவரான ஹுன் சென் கூட ஒரு முன்னாள் செங்க்மெர் என்பதும் மறக்கப்பட்டுவிட்டது. வசதியாக இன்றைய காம்போஜ ஆட்சி உலகவங்கிக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் பணிந்து போகும் ஊழல் மிகுந்த ஆட்சி. அதில் அதிகாரப் போட்டியும் மிகுதி. ஒடுக்கப்பட்ட மக்களது நலன்கட்காகப் போராடும் எண்ணம் அதற்கு இல்லை. இந்த ஆட்சிக்கு மாற்றுச் சக்தியாக அமைய இயலாதவாறு செங் க்மெர் உட்பிளவுகளாலும் அயல் நாடுகளின் ஆதரவு போதாமையாலும் கடந்த காலத் தவறுகளாலும் பலவீனப்பட்டு விட்டது. அதன் தவறுகளிற் சில ஜே.வி.பியை நினைவூட்டலாம். அதன் போராட்டம் விடுதலைப் புலிகளை நினைவூட்டலாம். ஆயினும் அது குறுகிய தேசியவாதக் கட்சியல்ல.

செங் க்மெர்கள் காம்போஜத்தில் மீண்டும் அதிகாரத்தைப் பிடிக்குமா என்ற கேள்வி என்றுமே முக்கியமானதல்ல. காம்போஜத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்திய வாதிகளையும் பன்னாட்டு நிறுவனங்களையும் மக்கள் எவ்வாறு எப்போது தூக்கி எறிவார்கள் என்பதே முக்கியமான பிரச்சனை. இன்றைய ஆட்சியாளர்கள் காம்போஜத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. செங்க்மெர்களின் மத்தியினின்று அதன் பழைய தவறுகளினின்று கற்ற ஒரு நல்ல வெகுஜனப் போராட்டச் சக்தி உருவாகா விட்டால், காம்போஜத்தின் சுமைகள் மேலும் பல காலம் தொடரலாம்.

# அரசாங்கத் தலைவர்கள் பேசுவதைக் கேட்டால் ....

(1ம் பக்கத் தொடர்ச்சி )

அதேபோன்று உள்நாட்டில் அதனைக் காட்டிக்கொண்டே யுத்தத்தை நடாத்தவதற்கும் அது தோள் கொடுத்து நிற்கிறது. மேலும் அரசியல் தீர்வில் அக்கறைப்படும் சக்திகளுக்கு இதோ தெரிவுக்குழு முன் வைத்துள்ளோம் எனக் கூறவும் அது வாய்ப்பளித்துள்ளது. அத்துடன் பாராளுமன்றத்தில் மாதா மாதம் யுத்தத்திற்கு அனுமதி பெறும் அவசரகாலச் சட்டத்தை நீடித்துக் கொள்வதற்கு ஆதரவு பெறவும் தீர்வுப் பொதி உதவி வருகிறது. குறிப்பாக தமிழர் கட்சிகளின் ஆதரவை பெற்று நிற்பதற்கு அப்பொதியைக் காட்டுவதும் இடையிடையே அதுபற்றிக் கலந்துரையாடி காலத்தைக் கடத்தும் கருவி போலவும் அரசியல் தீர்வுப் பொதி அரசாங்கத்தால் பயன்படுத்தப் படுகிறது.

ஆனால் அண்மைக்காலமாக ஜனாதிபதியோ அன்றி அமைச்சர் ஜி.எல்.பீரிசோ திட்டவட்டமான ஒரு நிலைப்பாட்டை அரசியல் தீர்வு பற்றி வெளியிட்டதாக அறிய முடியவில்லை. அவர்களது பேச்சுக்களில் முன்னுக்குப் பின் முரணான அம்சங்களே வெளிவருகின்றன. அதிகாரப் பரவலாக்கம் பற்றிப் பேசியவர்கள் தற்போது அடுத்து மாகாணசபைத் தேர்தல்கள் நடத்துவது பற்றிப் பேசுகிறார்கள். அதன் அர்த்தம் தங்களால் அரசியல் தீர்வுத் திட்டமாக வகுக்கப்பட்டிருக்கும் பிராந்திய சபைகள் என்பது தற்போதைக்கு இல்லை என்பதாகும். அரசியல் அமைப்புக்கான 13 வது திருத்தத்தை எக்காரணம் கொண்டும் நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று கூறும் அமைச்சர் பீரிஸ் தான் மாகாணசபைகளுக்கான தேர்தல் பற்றியும் கூறுகிறார். இந்த மாகாணசபை முறை அந்த 13 வது திருத்தத்திற்கு உட்பட்ட ஒன்றேயாகும். ஆகவே மாகாணசபைகளுக்கான தேர்தல் என்பது வடக்கு கிழக்கு தவிர்ந்ததாகவே இருக்கப் போகிறது என்பது தான் அர்த்தம்.

மேலும் தீர்வுத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி முட்டுக்கட்டை இருக்கிறது எனக் கூறி தமிழ்க் கட்சிகளை அவர்களுடன் பேசுமாறு கேட்டு வந்தவர் அமைச்சர் பீரிஸ். தமிழ்க் கட்சிகளும் ஏதோ ஐ.தே.கட்சியினருடன் பேசினார்கள். ஆனால் இப்போது தமிழ்க் கட்சிகளுக்கு உறைப்புடன் நீங்கள் உங்களுக்குள் ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று கூறுகிறார். அதேபோன்று தமிழ், முஸ்லிம் கட்சிகளும் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என அமைச்சர் விரும்புகிறார்; அதாவது தமிழ்க் கட்சிகளுக்கிடையிலோ அன்றி முஸ்லிம் கட்சிகளுக்கிடையிலோ தீர்வு பற்றிய ஒருமுக முடிவை எடுக்குமாறு கேட்பது தமது பொறுப்பைத் தட்டிக்கழித்து மற்றவர் மீது பழியை சுமத்தி இழுத்தடிப்பதற்கேயாகும்.

இவ்வாறு அரசியல் தீர்வு பற்றி அக்கறையுடன் பேசி வந்தவர்களே இன்று முன்னுக்கு முரணாகவும் இழுத்தடித்து காலத்தை கடத்தும் நோக்குடனும் பேசி வருவது அரசியல் தீர்வு அண்மையில் நடக்கப் போகிற காரியம் அல்ல என்பதையே எடுத்துக் காட்டி நிற்கிறது. அதேவேளை அரசியல் தீர்வைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு ராணுவத் தீர்வே முன்னுக்குச் சென்று கொண்டிருக்கிறது. அண்மையில் ஜனாதிபதி பேசிய ஒரு பேச்சில் ராணுவத் தீர்வுக்குப் பின்பே அரசியல் தீர்வு என்ற தொனிபடக் கூறியுள்ளார். இவை யாவற்றையும் நோக்குமிடத்து அரசியல் தீர்வு அண்மையில் மட்டுமல்ல தூரத்திலும் இருக்குமா என்ற கேள்வியே முன் எழுந்து நிற்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

PUTHIYAPOOMI

පුදිය පූමි


## சப்புகஸ்கந்தையில்

# சர்வதேச இராணுவக் கல்லூரி

சப்புகஸ்கந்தையில் சர்வதேச இராணுவக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்படவிருப்பதாக செய்தி வெளியாகியிருந்தது. இக்கல்லூரி பாகிஸ்தான், இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகளின் இராணுவக் கல்லூரிகளுக்கு இணையானதாக இருக்கும் என்று அறியமுடிகின்றது. இக்கல்லூரி சாதாரண இராணுவ வீரர் பயிற்சி முகாம்கள் போலன்றி பாதுகாப்பு, இராணுவ விவகாரங்கள், இராணுவ உணவு போன்ற விடயங்களையும் உள்ளடக்கிய இராணுவக்கல்விக்கான பட்டத்தை வழங்கும் அதியுயர் இராணுவக் கல்வி நிறுவனமாக அமையவிருக்கிறது.

இக்கல்லூரிகளில் மேஜர் பதவியில் இருப்பவர்களுக்கும் அதற்கு மேலான பதவியில் இருப்பவர்களுக்குமே கற்க அனுமதிகிடைக்கும் என்றும் அறியமுடிகின்றது. இக்கல்லூரியில் இலங்கையிலிருந்து மட்டுமன்றி வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். இக்கல்லூரிக்கு பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்தும் விரிவுரையாளர்கள் வரவழைக்கப்படவிருக்கின்றனர்.

ஏற்கனவே இலங்கையில் இயங்கும், 'கொத்தலாவலை அகடாமி' இராணுவ உத்தியோகத்தர்களுக்கு தொழிநுட்ப பயிற்சிகளையும், பட்டப்படிப்புகளையும் வழங்குகிறது. அங்கிருந்து ஒவ்வொரு வருடமும் சலுகை அடிப்படையில் (குறைந்த புள்ளிகளை க.பொ.த. உயர்தரத்தில் பெற்றவர்களும்) பல்கலைக் கழகத்திற்கு குறிப்பிட்ட எண்ணிக்கையான இராணுவ உத்தியோகத்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆனால் சப்புகஸ்கந்தையில் அமையவிருக்கும் சர்வதேச இராணுவக் கல்லூரி சர்வதேச தரத்தினதாக இருக்கும்.

சர்வதேச அமைதிக்காகவும், சமாதானத்துக்காகவும் குரல் எழுப்பிய அணிசேரா நாடுகளின் இயக்கத்தின் முக்கிய உறுப்பினராக இருந்த இலங்கையில் சர்வதேச இராணுவக்கல்லூரி அமைய விருப்பது, அதனது வெளிநாட்டு கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை தெளிவாகக் காட்டுகிறது. இக்கல்லூரிக்கு பலநாடுகளிலிருந்தும் இராணுவ நிபுணர்கள் வந்து போவது என்பது எமது நாட்டின் பாதுகாப்பை எந்தளவுக்கு பாதிக்கப் போகிறது என்பது பற்றி ஒருவரும் சிந்திப்பதாக தெரியவில்லை.

அந்த வெளிநாட்டு நிபுணர்கள் எமது நாட்டின் பாதுகாப்பு இரகசியங்களை மிகவும் இலகுவாக பெறக் கூடியவர்களாக இருப்பர் என்பதும் நினைவில் கொள்ளப்படுவதாக இல்லை.

உள்நாட்டிலும் கூட மனித உரிமைகள், ஜனநாயக, சமாதானம், அமைதி என்றெல்லாம் கதைக்கப்படும் அதேவேளை இராணுவக் கல்லூரியை அமைப்பது என்பது நிச்சயமாக இலங்கை மக்களின் மனித உரிமைகள், ஜனநாயகம், சமாதானம் என்பவற்றுக்கு மாறானதாகவே கொள்ளப்பட வேண்டும்.

தேசிய இனங்களுக்கு உரிமை வழங்குவதற்கும் சுயாட்சி வழங்குவதற்கும் எதிராக இலங்கை ஒரு சிறியநாடு என்று கூறப்படுகிறது. ஆனால் மனிதகுலத்திற்கு நாசம் விளைவிக்கும் இராணுவ விடயங்களை அணைத்துக் கொள்வதில் ஒரு வல்லரசு, போலவே இலங்கை அரசாங்கம் நடந்து கொள்கிறது.

அத்துடன் சர்வதேச இராணுவக் கல்லூரி அமைக்கப்பட்டதும் இலங்கை சர்வதேச இராணுவ விவகாரங்களின் மையமாகப் போகிறது. அதனால் இலங்கை அரசாங்க கொள்கைகளில் மக்களுக்கு விரோதமான இராணுவவாத நிலைப்பாடுகள் மேலும் வலுவடையும்.

இத்தகையதோர் கல்லூரியின் அவசியம் ஏன் தேவைப்படுகிறது என்பது ஆழ்ந்து சிந்திக்கப் படவேண்டியதாகும். இலங்கை சிறியதோர் நாடு மட்டுமன்றி அன்பு அகிம்சையைப் போற்றி நிற்கும் பௌத்த நாடு என்றும் பெருமை கொள்ளப்படுகிறது. அதே நேரம் இராணுவத்தை சக்திப்படுத்தி பலப்படுத்துவதில் மும்முரம் காட்டுகின்றது. இது எதற்காக? இதன் பின்னணியில் இருப்போர் யார்? இவை மக்களால் எழுப்பப்பட வேண்டிய கேள்விகளாகும்.

இராணுவ மயப்படுத்தலாலும் அதற்கு தலைமை தாங்கக் கூடிய உயர் தளபதிகளைப் பயிற்றுவிப்பதாலும் கிடைக்கும் நன்மைகள் இந்நாட்டு உழைக்கும் சாதாரண மக்களுக்கு அல்ல. இன்று பயங்கரவாதத்திற்கு எதிரான ராணுவ நடவடிக்கை என்பது அதனோடு முடிந்து விடக்கூடிய ஒன்றல்ல. நாளை இந்நாட்டின் உழைக்கும் மக்கள் அனைவரும் எழுப்பும் நியாயமான கோரிக்கைகளின் முன்னாலும் இதே ராணுவம் நிறுத்தப்படும் என்பது தெற்கில் உணரப்படுவது அவசியம். இதற்கு முன்னைய அனுபவங்கள் நிறையவே உண்டு.

இறுதியில் இலங்கை மக்கள் தமது சுதந்திரம் சுயாதிபத்தியத்தை இழக்கவும் ஜனநாயக மனித உரிமைகளை கேட்க முடியாதவர்களாக ஆக்கவுமே ராணுவ மயப்படுத்தல் இடம் பெறுகிறது. அதன் ஒரு அம்சமாகவே சர்வதேச ராணுவ கல்லூரி அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

# புதிய - ஜனநாயக கட்சியின்

# 3 வது தேசிய மாநாடு

புதிய -ஜனநாயக கட்சியின் 3 வது தேசிய மாநாடு கடந்த யூன் 20 ம் 21 ம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்றது என அக்கட்சி மாநாட்டிற்குப் பின் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவித்துள்ளது. தேசிய இனப்பிரச்சினை உருவாகியுள்ள தேசிய முரண்பாடு ஏற்கனவே இருந்து வரும் அடிப்படை முரண்பாட்டையும் மேவிய நிலையில் பிரதான முரண்பாடு என்ற நிலைக்கு வந்துள்ளமையை அடையாளப்படுத்திய மாநாட்டு அரசியல் அறிக்கை இலங்கை ஒரு பல்லின நாடு என்றும் சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் இலங்கையில் சிங்களவர் தமிழர் முஸ்லிம்கள் மலையகத் தமிழர் என்னும் நான்கு தேசிய இனங்களும் மலாய், பறங்கியர், வேடர் ஆகிய சிறுபான்மைச் சமூகங்களையும் கொண்ட ஒரு பல்லின நாடாக விளங்கும் யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இத்தேசிய இனங்களை உள்ளடக்கிய தேசிய இனப் பிரச்சினைக்கு ஒன்றுபட்ட நாட்டிற்குள் தீர்வு காணப்படல் வேண்டும் என்பதையும் மேற்படி அறிக்கை வற்புறுத்தியுள்ளது. இவ்வாறான ஓர் தீர்வு நீண்டகால குறுகிய கால நிலைப்பாடுகளில் இருந்து நோக்கப்படுவதையும் தெளிவுபடுத்தியது. குறுகிய காலத் தீர்வு ஒன்று காணப்படுவதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய மாநாட்டு அறிக்கை அதன் வழியில் உடன் யுத்த நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் நியாயமான அரசியல் தீர்வுமாக அமைதல் வேண்டும், என்பதுடன் அத்தகைய பேச்சுவார்த்தை புலிகள் இயக்கத்துடனும் ஏனைய தமிழர் கட்சிகளுடனும் இடம் பெறல் வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் தாராள பொருளாதாரக் கொள்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு ஏகாதிபத்திய பல்தேசியக் கம்பனிகள் நாட்டைச் சூறையாட அனுமதித்துள்ள பொதுசன ஐக்கிய முன்னணியின் கொள்கையால் தேசிய பொருளாதாரம் வேரறுக்கப்பட்டு வருகின்றமையை அறிக்கை வன்மையாகக் கண்டித்துள்ளது. மேலும் தனியார் மயத்தினால் தொழிலாளி வர்க்கம் மட்டுமன்றி விவசாயிகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருவதை சுட்டிக் காட்டிய அறிக்கை பெரும் தோட்டத் தொழில்துறை தனியார் மயமாக்கியதன் மோசமான விளைவுகளை தோட்டத் தொழிலாளர்கள் எதிர் கொண்டு நிற்பதையும் எடுத்துக் காட்டியுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் தமது வேலைநாட்களை இழக்காத வகையிலும் மாதச்சம்பளத்திற்கான புதிய ஒப்பந்தம் ஒன்று செய்யப்படுவதை அறிக்கை ஆதரித்தது.

மேலும் நுகர்வுக் கலாசாரச் சீரழிவுகளையும் ஊடக தொடர்பு சாதனங்களின் கட்டுப்பாடற்ற போக்குகளும் ஊக்குவிக்கப்படுவதன் பின்னால் முதலாளித்துவ ஏகபோக சக்திகளின் வல்லமையான கரங்கள் இருந்து வருகின்றன. அத்துடன் மாக்சிச இடதுசாரி தொழிலாளி வர்க்க இயக்கங்களை நிர்மூலமாக்கும் ஒருவகைத் தந்திரோபாயமாக அரசுசார்பற்ற நிறுவனங்கள் மூலமான செயற்பாட்டையும் அதற்கான மிதமிஞ்சிய பணத்தையும் ஏகாதிபத்திய சக்திகள் வழங்கி வருகின்றன. அத்தகைய பணமூட்டைகளை நோக்கி புத்திஜீவிகள் கூட்டத்தின் ஒரு பகுதி இவ் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடே ஓடிக் கொண்டிருப்பது மட்டுமன்றி சிலர் மாக்சிச விரோதக் கருத்தியல்களின் பிரச்சாரகர்களாகியும் நிற்கும் போக்கு முனைப் படைந்து காணப்படுவதையும் மாநாட்டு அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

மேலும் 'உலகமயமாதல்', 'புதிய சர்வதேச ஒழுங்கு' போன்ற பெயர்களில் உலக முதலாளித்துவ ஏகபோக சக்திகள் இன்று அமெரிக்கா, ஐரோப்பா, யப்பான் ஆகிய மூன்று மையங்களில் தம்மை வலுப்படுத்தி நிற்கின்றன. அவற்றுள் முரண்பாடுகள் காணப்படும் அதேவேளை மூன்றாம் உலக நாடுகளை கொள்ளையிட்டுச் சுரண்டி நவ கொலனித்துவத்தைப் பல்வேறு வழிவகைகளில் இருப்புச் செய்து வருவதையும், அவற்றுக்கெதிரான போராட்டங்களின் அவசியத்தையும் அரசியல் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

இரண்டுநாட்கள் நடைபெற்ற இம் மாநாட்டின் முடிவில் பதினாலு பேர் கொண்ட புதிய மத்திய குழு தெரிவு செய்யப்பட்டது. மாநாட்டிற்கு வடக்கு கிழக்கு மலையகம் கொழும்பு பிரதேசங்களில் இருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மத்திய குழு கீழ்வருமாறு தெரிவு செய்து கொண்டது. பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், தேசிய அமைப்பாளர் இ.தம்பையா பொருளாளர் சோ.தேவராஜா, ஒன்பது பேர் கொண்ட உறுப்பினர்களும் தெரிவாகினர்.




கடந்த யூன் 20ம் 21ம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற புதிய ஜனநாயக கட்சியின் 3வது தேசிய மாநாட்டில் இ.தம்பையா ஆரம்ப உரையை நிகழ்த்துவதையும், அருகில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் மற்றும் தலைமைக் குழுத் தோழர்கள் அமர்ந்திருப்பதையும், மாநாட்டுப் பிரதிநிதி ஒருவர் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

வெளியிடுபவர் : இளையதம்பி தம்பையா, இல14, 57வது ஒழுங்கை, கொழும்பு -06, பிரசுரம்: நவமக அச்சகம், 334 காலி வீதி இரத்மலானை.